# நீயும் நானும் வேறல்ல...

ஆர்.மணிமாலா





# நீயும் நானும் வேறல்ல...

# நீயும் நானும் வேறல்ல...

## 1



செல்பேசியில் அலாரம் இனிமையாய் அழைக்க... அந்த அழகான இளம்பெண்ணின் இமைகள் இதமாய் அசைந்தன. கண்களைத் திறவாமலே செல்பேசியை எடுத்து, அணைத்து வைத்தாள்.

தென்றலின் சீண்டலில் ஜன்னல் திரைச்சீலைகள் நடனமாட... குபுக்கென உள்ளே புகுந்த காற்று மென்மையான அவள் மேனியைத் தொட... சிலிர்த்தாள்.

அருகாமையிலிருந்த அம்மன் கோவிலிலிருந்து ஈசுவரியின் பாட்டு, கணீர் குரலில் வந்து இன்னும் உசுப்பிற்று.

மார்கழி மாதம் அல்லவா?

மெல்ல கண்விழித்தாள்.

மின்விசிறி 'ஜிகுஜிகு'வென சுழன்று கொண்டிருந்தது.

ஜன்னலுக்கு வெளியே இருள் இன்னும் பிரிய வில்லை.

கொட்டாவி விட்டபடி அவள் எழுந்து அமர்ந்தாள்.

ஒரு கணம், கண்மூடி பிரார்த்தித்தாள்.

'இன்றைய நாள்... எல்லோருக்கும் இனிய நாளாக இருக்கட்டும் கடவுளே!'

வழக்கமாய் கோரும் அதே கோரிக்கை.

தொள தொள பருத்தி இரவு உடை அவளுக்கு மிக எடுப்பாக இருந்தது.

அளவான, அடர்த்தியான கேசம் கலைந்திருந்தாலும், நிரந்தர மினுமினுப்பில் மெருகூட்டியது.

உடம்பை இப்படியும், அப்படியுமாய் வளைத்து - குளியலறை சென்றவளுக்கு சுறுசுறுப்பு வந்து ஒட்டிக் கொண்டது.

பல் துலக்கி, முகம் கழுவி வந்தவள், ஒரு சொம்பு தண்ணீரை குடித்து முடித்தாள்.

அவள் அறையை ஒட்டிதான் மாடிக்கு படிகள் சென்றன.

இரவின் மிச்சம் இன்னுமிருந்தது. வீட்டிலுள்ள மற்றவர்கள் உறக்கத்தின் பிடியிலிருந்தனர்.

மாடிக்குச் சென்றாள், சம்யுக்தா.

கரியவானில் விடைபெற மனமின்றி இன்னுமிருந்தது; நிலா, நட்சத்திரங்கள் கண்சிமிட்டி, அதை அழைத்துக் கொண்டிருந்தன.



மார்கழிக் குளிர், எலும்பை உரசிப் பார்த்தது.

உடற்பயிற்சி செய்யத் தொடங்கிய சம்யுக்தாவைப் பற்றிச் சொல்வதற்கு நிறைய இருக்கிறது.

அவள் அழகி.. பேரழகி!

ஒவ்வொரு நிமிடத்தையும் பயனுடன் கழிக்கும் சகல கலா வெல்லி.

எல்லா துறையிலும் பயிற்சி பெற்றிருந்தாள்.

அந்த ஆண்டுதான் சுடச்சுட பி.பி.ஏ. முடித்திருந்த சம்யுக்தா, கல்லூரியில் அழகு ராணியாக தேர்ந்தெடுக்கப் பட்டவள்.

கர்நாடக சங்கீதம் கற்றிருந்தாள். அருமையாக ஓவியம் வரைவாள். வீடு, அலுவலகத்துக்கு உள் அலங்காரம் செய்வாள். தோட்டக் கலையிலும் ஈடுபாடு உண்டு.

அப்பா சந்தானமூர்த்தி, வெளிநாட்டு கூட்டு கம்பெனி யில் உயர் அதிகாரி. அம்மா மோகனா, பட்டதாரி. குடும்பப் பொறுப்பை நிர்வகித்து வந்தாள். ஒரே தம்பி கார்த்திக். கல்லூரியில் முதலாண்டு படிக்கிறான்.

அடையாறில் நான்கு படுக்கையறை கொண்ட விசாலமான வீடு, இரண்டு நாய்கள் என்று நிம்மதியான ஆனந்தமான குடும்பம் அவர்களுடையது.

அந்தக் குளிரிலும் சம்யுக்தா வியர்த்திருந்தாள்.

உடற்பயிற்சியை முடித்துவிட்ட சம்யுக்தா, துண்ட கழுத்து, முகத்தைத் துடைத்தபடி கீழிறங்கினாள்.

அம்மாவின் அறையில் விளக்கு எரிந்தது.

'விழித்துவிட்டாளோ?'

தன் அறைக்குச் சென்ற சம்யுக்தா, முகத்திற்கு 'கிரீம்' போட்டாள். பளிச்சென்றிருந்தது.

ஆளுயரக் கண்ணாடி முன் நின்று தன்னை ஆராய்ந்தாள், உபரியாய் சதைப் போட்டுவிட்டதோ, என்று.

திருப்தி வந்தது.

மின்னல் கொடி போல் இருந்தாள், சம்யுக்தா. தலையில் இருந்து கால் வரை பார்த்துப் பார்த்துச் செதுக்கிய சிற்பமாகத் தெரிந்தாள். முகத்தில் குழந்தைத்தனம் மிச்சமிருந்ததால், அழகும் கனிவுமாக மின்னினாள்.

நல்ல நிறம். அளவான உயரம் என்று பெண்களே வயிறெரியும் அளவுக்கு எடுப்பாக இருந்தாள்.

வீட்டில், 'சுப்ரபாதம்' ஒலித்தது.

சம்யுக்தா குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

அரை மணி நேரம் கடந்தபின்... உலர்ந்த கூந்தலுடன் கீழிறங்கி வந்தாள். கருங்கூந்தல் சகிதமாக அலுங்காமல், குலுங்காமல் நடந்தாள்.

மோகனா அப்போதுதான் பூஜையை முடித்துவிட்டு அறையிலிருந்து வெளியே வந்தாள். தளர்வாக முடிச்சிட்டிருந்த கொண்டையிலிருந்து நீர் சொட்டிக் கொண்டிருந்தது.

மோகனா - சம்யுக்தா என்னும் அழகு தேவதையைப் பெற்றெடுத்தத் தாய்.

''அம்மா காபி!''

''கொஞ்சம் பொறு.. தர்றேன்!''

''அப்பா எங்கே? வழக்கமா இந்நேரத்துக்கு பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருப்பாரே! இன்னைக்கு இன்னும் எந்திரிக்கலையா?''



''அவர் விடியறப்பவே எந்திரிச்சு வெளியே போயிட்டார். அலுவலக சம்பந்தமாய் இத்தாலியிலிருந்து யாரோ வர்றாங்களாம். அவங்களை வரவேற்று, ஓட்டலில் தங்க வைக்கணுமாம்.''

''ஏதோ.. இன்னைக்கு அப்பாவுக்கு நல்ல காலம்னு சொல்லு!''

''என்ன சொல்றே?''

''உன் பாடாவதி சமையலை சாப்பிடுறதிலேருந்து தப்பிச்சிட்டாரே!''

''திமிர்.. உடம்பு முழுக்க உனக்குத் திமிர்!''

''இருக்காதேம்மா.. நான்தான் தினமும் உடற்பயிற்சி செய்யுறேனே?''

''உன்கிட்டே பேசிக்கிட்டிருக்க எனக்கு நேரமில்லே! காபி தர்றேன். குடிச்சிட்டு, உருப்படியா ஒரு வேலை செய்வியா?''

''அழாதே.. என்ன செய்யணும், சொல்லு?''

''தோட்டக்காரன் ரெண்டு நாள் வரமாட்டான். ஊரில் யாருக்கோ உடம்பு சரியில்லேன்னு தந்தி வந்தது போயிட்டான். தோட்டத்துக்கு தண்ணி விடணும். செய்வியா?''

''தடிப்பயல் கார்த்திக் என்ன பண்ணுறானாம்? இன்னைக்கு எனக்கு நிலா டி.வி.யில் நேர்முகத் தேர்வு. புறப்பட வேண்டாமா?''

''அவன் இன்னும் எந்திரிக்கலேடி! பேசுற நேரம் தண்ணி பாய்ச்சிட்டு வந்திடலாம். உனக்கு இன்னும் நேரமிருக்கே?''

"சரி.. சரி.. காபி கொடு!" என்றவள், வாங்கிக் குடித்தாள்.

"கார்த்திக் சோம்பேறியா இருக்கான். நீ ரொம்ப செல்லம் தர்றேம்மா. இப்ப இருந்தே பொறுப்புகளை ஒப்படைச்சா தானே தனக்குரிய கடமைகளை ஒழுங்கா செய்வான்?"

"அவனுக்கு பக்குவம் போதாது. எல்லாம் சரியாகும். சின்னவன்தானே?"

"ஆமாம்.. சின்னப் பையன்.. தூக்கி வச்சுக்கிட்டு கொஞ்சு! அவனுக்கு பதினெட்டு வயசு ஆகியாச்சு.. ஞாபகமிருக்கட்டும்."

"உனக்கு புறப்பட நேரமாகலையா, சமி?"

"உன் செல்லப் பிள்ளையைப் பற்றி ஒண்ணும் சொல்லிடக் கூடாதே.. எப்படியோ போ! கடைசியில் அவதிப் படப் போறது நீதானே?" சொன்னவள், தோட்டத்துக்கு வந்தாள்.

தொட்டியில் பல வண்ணங்களில் ரோஜா பூத்துக் குலுங்கின.

பார்க்கவே ரம்மியமாக இருந்தது. தோட்டம் முழுக்க ரோஜா செடி மட்டுமே! இது சம்யுக்தாவின் யோசனை.

பெயர் தெரியாத தாவரங்களை அழகுக்கென, பெருமைக்கென வீட்டில் வளர்ப்பதில் அவளுக்கு உடன்பாடில்லை.

வெல்லமுடியாத அழகுடன் பூத்துக்குலுங்கும் ரோஜாவுக்கு இணை ஏது?

ஆசையுடன் பூக்களை வருடினாள். மார்கழிப் பனியில் மலர்கள், குளிர்ச்சியாய் வியர்த்திருந்தன.



ரசித்தபடி செடிகளுக்கு தண்ணீர் ஊற்றத் தொடங்கினாள்.

அம்மா பரிமாற.. கேட்டு, கேட்டு வாங்கி சாப்பிட்டுக் கொண்டிருந்தான், கார்த்திக். பதினெட்டு வயதென்றால் யாரும் நம்பமாட்டார்கள். சம்யுக்தாவுக்கு அண்ணன் போலிருந்தான். அப்படியொரு நெடுநெடு உயரம்.

சம்யுக்தா வந்தமர்ந்தாள்.

அம்மா, அவளுக்கும் தட்டு வைத்தாள்.

"என்ன டிபன்ம்மா?"

"இட்லி, பொங்கல்!"

"ஏதாவது ஒண்ணு வைத்தால் போதாதா? உனக்கும், அப்பாவுக்கும் வயதாகிவிட்டது. இத்தனை வகை சாப்பிடுறது உடம்புக்குத்தான் கெடுதல்."

"ஏன்.. என்னைப் பார்த்தால் உனக்கு எப்படித் தெரியுதாம்? நான் சாப்பிடமாட்டேனா?" கார்த்திக் குறுக்கிட்டான்.

"சாப்பிடுறதைத் தவிர உருப்படியா நீ வேறு என்னப் பண்ணுறே? படிப்பும் ஏறமாட்டேங்குது!"

"ஏணி வாங்கி ஏத்திக்கிறேன். நீ உன் வேலையைப் பாரு... அம்மா, சூடாக ஒரு வடை வை!"

"பேசாம சாப்பிடேன் சமி... உனக்கு நேரமாகலே?"

"வாயை அடைக்கிறியா? எனக்கென்ன வந்தது?"

தட்டில் இரண்டு இட்லி வைத்தாள், அம்மா.

"அய்யோ.. ஒண்ணு போதும்!" என்று ஒன்றை எடுத்து பாத்திரத்திலேயே போட்டுவிட்டாள்.

"ரொம்ப அநியாயம் சமி! கைக்குழந்தை சாப்பிடு மாதிரி சாப்பிட்டால் உடம்பு என்னத்துக்காகும்?"

''அந்தம்மாவுக்கு சிம்ரன்னு நினைப்பு! உடம்பைக் கட்டுக்கோப்பா வச்சுக்கிறாங்களாம்! அந்த இட்லியை இப்படிப் போடு!''

''கேக்கிறான் இல்லே.. அங்கேயே கொட்டு.. என்னை ஏன் முறைச்சுப் பார்க்கிறே? அட.. நேரமாயிடுச்சே!'' கைக்கடிகாரத்தைப் பார்த்துப் பதறி எழுந்து கொண்டாள்.

அடுத்த இரண்டாவது நிமிடம் அவளின் வண்டி விர்ரென்று புறப்பட்டது.



2

தொடையைக் கவ்விப்பிடித்திருந்த அரை பேண்ட்டும், அதற்குமேல் தொளதொள பனியனுமாய் வீட்டினுள் நடந்தபடியே யாருடனோ 'செல்'பேசியில் பேசிக் கொண்டிருந்தான், சந்துரு.

பனியன் தளர்வாக இருந்தாலும் உடற்பயிற்சியால் மதர்த்திருந்த மார்பும், திண்ணென்ற தோள்களும் விடைத்து நின்றன.

சந்துரு என்ற பெயரை உச்சரித்தால், தொழில் உலகத்தில் 'ஓ.. அவரா?' என்று புருவம் உயரும்.

முப்பது ஆண்டு உருண்டு புரண்டு வெற்றியைத் தொட்ட ஜாம்பவான்களையே மிரள வைத்தவன், சந்துரு. அவன் பொறுப்பேற்று ஐந்து ஆண்டுதான் ஆகிறது. ஆனால், அவனது வெற்றிகள் வியப்பைத் தரும்.



ஒரு தொழிற்சாலை என்றால், அதற்கான உப பொருட்களை வாங்க இன்னொரு தொழிற்சாலையை எதிர்பார்த்திருப்பது தான் எங்கும் நிலவும் இயல்பான விசயம்.

அப்பா அமுதன் பொறுப்பிலிருந்த வரை அவரும் அப்படிதான் நிர்வகித்து வந்தார். அவர், திடீரென பக்கவாதத்தில் விழுந்து, கடுமையான சிகிச்சையால் தேறினாலும் முழு ஓய்வு அவசியம் என்பது மருத்துவரின் அறிவுரை.

அப்போது தான் இளங்கலை பட்டப்படிப்பை முடித்திருந்த சந்துரு, மேற்படிப்பைத் தொடர லண்டனில் எல்லா ஏற்பாடுகளும் முடித்துவிட்ட நிலை. தந்தை படுக்கையில் விழுந்தார்.

வேறு வழியின்றி, தன் மேல்படிப்பைக் கைவிட்டு, உடனடியாக கம்பெனிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டான்.

நிர்வாகத்திலிருந்த குறைபாடுகளைக் கண்டறிந்து, தகுதியற்ற ஆட்களை களை எடுத்து, நன்கு படித்த இளைஞர் - இளைஞிகளை பணியில் அமர்த்தினான்.

அனுபவஸ்தர்களை தனிப்பிரிவாக செயல்படச் செய்தான்.

அமுதன், கார் கம்பெனி நடத்திக் கொண்டிருந்தார். சந்துரு வந்தபின் உதிரிபாகங்களையும் தயாரித்தான். தவிர, உயர்ந்த சுவையுடன், குறைந்த விலையில் குளிர் பானம் தரும் முயற்சியில் இறங்கினான்.

அவன் கணக்கு, வீண் போகவில்லை. சந்துருவின் 'ஜில்' குளிர்பானம் இப்போது விற்பனையில் முதலிடத்தில் இருக்கிறது.

அதேபோல், தரமான காகிதத்தில் நோட்டு, புத்தகங்களை அச்சடித்து விற்றான்.

நல்ல பொருட்களை நியாயமான விலையில் கொடுப்பது போலவும் ஆயிற்று! நூற்றுக்கணக்கானவர்களுக்கு வேலையும் அளித்தாயிற்று!

சந்துருவுக்கு இதில் கிடைத்த ஓரளவு லாபமும், மனதிருப்தியையும் மகிழ்வையும் தந்தன.

அம்மா லெட்சுமி, கம்பெனி காரியங்களில் என்றைக்குமே தலையிட்டதில்லை.

சந்துரு கலாரசிகன்!

இயற்கையையும், அழகையும் நேசிப்பவன்.

தோட்டத்தில் காதல் பறவைகள் உட்பட விதவிதமான பறவைகளை வளர்க்கிறான்.

கடற்கரையோரம் அமைந்திருந்த மாளிகை, ஓய்வான நேரங்களில் தன் அறையையொட்டிய பால்கனியில் இருந்தபடி, சீறிப் புறப்படும் சிப்பாய்கள் போல் அடுத்தடுத்து - சோர்ந்து போகாமல் வந்து கொண்டே இருக்கும் அலைகளை ரசிப்பது ரொம்பவே பிடிக்கும்.

ஒரு வழியாய் தொலைபேசியில் பேசி முடித்தான், சந்துரு.

''இவ்வளவு நேரமாகவா பேசுவது? இதோ பாரு, உனக்காக வைத்திருந்த காபி ஆறிப்போச்சு'' என்றாள், லெட்சுமி.

''முக்கியமான வேலைம்மா!''

''அலுவலக வேலை அலுவலகத்தோடு இருக்கட்டும். வீடுவரை எதற்கு? இங்கு நீ என் பிள்ளையாக மட்டும் இரு!''



''சரிம்மா.. முயற்சி பண்ணுறேன்! உன் செல்லப் பிள்ளைக்கு சூடாக வேறு காபி தரமாட்டாயா?''

''தர்றேன்! அப்புறம், அப்பா உன்னிடம் பேசணும்னு சொல்லிக்கிட்டிருந்தாரே.. பேசினாரா?''

''இல்லையே.. என்ன விசயம்?''

''பிறகு பேசலாம்.. குளிச்சிட்டு வா!'' அம்மா பீடிகையுடன் பேசுவதிலிருந்தே அவனுக்குப் புரிந்தது, பேச்சு எதைப்பற்றி என்று.

சிரித்தபடி, அம்மா கொடுத்த காபியை குடித்துவிட்டு நகர்ந்தான்.

பதினைந்து நிமிடம் சென்றிருக்கும்.

விஷ்ணு வந்தான்.

சந்துருவின் நெருங்கிய தோழன். சிறுவயதிலிருந்து கல்லூரி வரை ஒன்றாகப் படித்தவன்.

சாப்பாட்டு மேசையில் பணியாள் உதவியுடன் உணவுப் பதார்த்தங்களை வைத்துக் கொண்டிருந்த லெட்சுமியம்மாள் பார்த்துவிட்டாள்.

''அடடே.. விஷ்ணு.. வாப்பா. எப்படி இருக்கே?''

''சவுக்கியமா இருக்கேன்ம்மா.. நீங்க எப்படி இருக்கீங்க? அப்பா எப்படி இருக்கார்?''

''ம்... நல்லா இருக்கோம்!''

''அட விஷ்ணுவா.. எப்பப்பா வந்தே?'' மெல்ல நடந்து வந்துகொண்டிருந்தார், அமுதன்.

''இப்பதாம்ப்பா!'' என்றபடி அவர் கைப்பற்றி, பத்திரமாய் அமர்த்தினான், விஷ்ணு.

"எங்கே.. என் நண்பனைக் காணோம்?" சிரித்தபடி கேட்டான்.

"உனக்குத்தான் தெரியுமே! குளிக்கப் போனால் ஒரு மணி நேரமாவது தண்ணீரில் ஊறணும், அவனுக்கு!"

"ஒரு சந்தோசமான விசயம் சொல்லத்தான் வந்தேன்!"

"என்னப்பா... சொல்லு" என்றார், ஆவலாய் அமுதன்.

"எனக்கு கல்யாணம் நிச்சயமாகி இருக்கு!"

"அட.. ரொம்ப சந்தோசம், விஷ்ணு! பொண்ணு யாரு, எந்த ஊரு? சொந்தமா?"

"இரு லெட்சுமி.. இப்படி கேள்வியை அடுக்கிக்கிட்டே போனா எப்படி? அவன் சொல்லட்டும்."

"அத்தைப் பொண்ணுதான்! பேரு சவுபாக்கியா."

விஷ்ணு விவரித்துப் பேசினான்.

இடையில் சந்துரு வந்துவிட்டான்.

"என்னடா.. உன் கல்யாணத் தகவலை சொல்லியாச்சா.. இனி எங்கம்மா என் தலையைப் போட்டு உருட்டப் போறாங்க!"

லெட்சுமி அனைவருக்கும் குளிர்பானம் பரிமாறினாள். பருகினார்கள்.

"நீயே சொல்லு விஷ்ணு! இதுவரைக்கும் ஏகப்பட்ட பொண்ணுங்களைப் பார்த்தாச்சு! யாரையும் பிடிக்கலே, பிடிக்கலேன்னு மறுத்திடுறான். சரி.. யாரையாவது விரும்புறானான்னு நீயே கேட்டுச் சொல்.. இந்த வீட்டுக்கு ஒரு மருமகள் உடனடியா வந்தாகணும்!"

"அதானே.. எனக்குக் கூட தெரியாம எந்தப் பொண்ணை யாவது..." சந்தேகமாய்ப் பார்த்தான், விஷ்ணு.



"உதைபடுவே ராஸ்கல்! அப்படியெல்லாம் இருந்தால் சொல்லிடமாட்டேனாம்மா? நீங்க எனக்கு நிறைய சுதந்திரம் கொடுத்திருக்கிறப்ப.. தைரியமா சொல்லிடு வேனே?"

அமுதன் தொண்டையை செருமிக்கொண்டார்.

"சந்துரு.."

"என்னப்பா?"

"கோயம்புத்தூர் மில் அதிபரோட ஒரே பொண்ணு. பேரு அனாமிகா. உடை அலங்காரம் பண்ணுறா. அவ படம் கூட பார்த்தியே! உங்க ரெண்டு பேர் ஜாதகமும் அம்சமா பொருந்தி இருக்கு. 'என்ன சொல்றீங்க?'ன்னு கேட்டு, அடிக்கடி போன் பண்ணுறாங்க! என்ன சொல்லட்டும்?"

"மன்னிச்சிடுங்கப்பா.. எனக்குப் பிடிக்கலை!"

"வழக்கமான அதே பல்லவியைப் பாடாதே, சந்துரு. ஏன் பிடிக்கலே? பொண்ணு தேவதை மாதிரி இருக்காளே?"

"அழகான பொண்ணுதான். நான் மறுக்கலே. ஆனா, எனக்குப் பிடிக்கலே."

"அதான் ஏன்?"

"தெரியலேப்பா! இவதான் உனக்குன்னு என் மனசு எந்தப் பொண்ணை சொல்லுதோ.. அவதான் உங்க மருமகள். சீக்கிரமே உங்களுக்கொரு மருமகள் கிடைக்க வாழ்த்துகிறேன்!" என்றபடி எழுந்து சென்றான், சந்துரு.

வருத்தத்திலும் சிரித்தார், அமுதன்.

லெட்சுமியின் முகம்தான் களை இழந்திருந்தது.

விஷ்ணு கவனித்தான்.

"கவலைப்படாதீங்கம்மா... அவனுக்கு நான் எடுத்து சொல்றேன். சந்துரு அதிகப்படியான ரசனைகளுக்கு சொந்தக்காரன். அதுதான் உங்களுக்கு பாதகம். பொண்ணை வலைவீசி தேட வேண்டியிருக்கு. சீக்கிரமே ஒரு நல்ல முடிவு கிடைக்கும்னு நம்புறேன். நீங்களும் நம்புங்க" என்றான், தீர்மானமாக!

# 3



பரபரப்பான சென்னையில் கார், சாலையில் வழுக்கிக் கொண்டு சென்றது. வழியில், சிக்னலுக்காக நின்றது. சந்துருவின் பக்கத்தில் அமர்ந்திருந்த விஷ்ணு சிரித்தான்.

"என்னடா சிரிக்கிறே?"

"சென்னை வறட்சியிலே இருக்குதுன்னு சொன்னாங்களே.. திரும்பிப் பார்... வகை வகையா நூற்றுக்கணக்கில் கார் நிற்பதை?"

"மடையா.. வறட்சின்னு சொன்னது பொருளாதாரத்தை இல்லே.. மழையைப் பற்றிதான். இப்பதான் வருண பகவான் கண்திறந்து அந்தப் பிரச்சினையும் தீர்ந்துடுச்சே?"

"சரி.. உன் பிரச்சினையை எப்ப தீர்க்கப்போகிறே?"

"என் பிரச்சனையா? எனக்கென்ன பிரச்சினை?"

"உன் வருங்கால மனைவியைப் பற்றிய பிரச்சினை?"

"அது 'சிந்துபாத்' கதை!"



"உங்கம்மா, உனக்காக பார்த்த பொண்ணுங்களோட படங்களையெல்லாம் காண்பிச்சாங்க. எல்லாருமே லட்டு, லட்டா, ரொம்ப அழகாகத்தான் இருக்கு. உனக்கு ஏன் பிடிக்கலே?"

"விஷ்ணு! உனக்கே.. தெரியும் என் ரசனை எப்படிப் பட்டதுன்னு?"

"ம்... தெரியாதா என்ன? அழகை ஆராதிப்பவனாச்சே? உன் அலுவலகத்தின் உள் அலங்காரத்தை அடிக்கடி மாற்றுபவன். அவ்வளவு ஏன்.. உன்னிடம் பணிபுரியும் பெண்களும் மிக அழகானவர்கள்தானே?"

"டேய்.. டேய்.. அதிகமாகப் பேசாதே! அதெல்லாம் தற்செயலாய் அமைந்தது. திறமையின் அடிப்படையில் அமர்த்தப்பட்டவர்கள்தான் அவர்கள்."

"சரி.. உன் எதிர்பார்ப்பு என்ன? அதைச் சொல்!"

"என் ரசனைகளுக்கு ஏற்றவளாய், ஓரளவாவது என் அலைவரிசையில் பயணிப்பவளாய், தெய்வீகமும், நாகரீகமும் கலந்த அழகுடன் இருப்பவளாய், பார்த்ததும் மனசுக்குள் ஒரு அலையடிக்கிறவளாய்..."

"பாவம் உன்னைப் பெத்தவங்க."

"ஏன்டா அப்படி சொல்றே?"

"நீ சொல்கிற தகுதிகள், ஒவ்வொருத்தர்கிட்டேயும் ஒவ்வொண்ணு இருக்கும். ஆனா, ஒட்டுமொத்தமா சேர்த்து ஒரே பொண்ணுகிட்டே இருக்குமா என்ன?"

"ஏன் இருக்காது? எனக்காக அப்படிப்பட்ட பெண்ணொருத்தி பிறந்து, வளர்ந்து காத்திருக்கா!"

"சரி.. இப்ப இந்தப் பேச்சு வேணாம். மாலையில் நேரமிருக்குமா? என் திருமண விசயமாய் கொஞ்சம் பேச வேண்டியிருக்கு."

வந்துவிடு.. பேசலாம்!''

"நேரே அலுவலகத்துக்கு வந்துவிடு.. பேசலாம்!''

"அலுவலகம் வேண்டாம். கடற்கரைக்குப் போகலாமா? போய் ரொம்ப நாளாகிவிட்டது.''

"ம்.. போகலாம்!''

இளம் ரோஜா நிறத்தில் வேலைப்பாடு அமைந்த சுடிதார், சம்யுக்தாவை தனித்துக் காட்டியது.

அந்தத் தனியார் தொலைக்காட்சி அலுவலகம் பிர மாண்டமாய் இருந்தது.

புதிதாய் ஜாக்கியைத் தேர்ந்தெடுக்கும் நேர்முகத் தேர்விற்கு சம்யுக்தா உட்பட ஏகப்பட்ட இளைஞிகள் வந்திருந்தனர். அத்தனை பேரிடமும் ஏதோ ஒரு அழகு பொதிந்திருந்தது.

அங்கு ஏற்கனவே பணிபுரிந்து கொண்டிருந்த ஆண், பெண் தொகுப்பாளர்கள், வந்திருப்பவர்களை ஒரு புன்னகையுடன் பார்த்தபடி சென்றனர்.

தேர்வு தொடங்கியது.

ஒவ்வொருவராக உள்ளே சென்றனர். அதுவரை பதற்றப் படாமல் இருந்த சம்யுக்தாவிற்கு வியர்க்கத் தொடங்கியது.

அவள் முறை வந்தது.

தைரியத்தை வரவழைத்துக்கொண்டு உள்ளே சென் றாள்.

வட்டவடிவ மேசைக்குப் பின்னால் பத்து பேர் ஆண் களும், பெண்களுமாய் அமர்ந்திருந்தனர்.

சம்யுக்தா நடந்து வரும்போதும், அவள் நளினமாய் வணக்கம் சொன்னபோதும் உன்னிப்பாய் கவனித் தனர்.



ஒருவர் மாற்றி ஒருவர் கேள்வி கேட்க, தயக்கமின்றி - பிசிறின்றி, தன் மெல்லிய புன்னகை மாறாமல் பதில் கூறினாள்.

ஒரு செய்தியைக் கொடுத்து படிக்கச் சொன்னார்கள். அழகான, சுத்தமான தமிழில் படித்தாள்.

இறுதியில் மேக்கப் பரிசோதனை செய்தனர். திரை யில் தெரிந்த அவள் முகபாவனையை ஆராய்ந்தனர்.

"காத்திருங்க மிஸ் சம்யுக்தா. ஒரு மணி நேரத்தில் முடிவு தெரியப்படுத்திவிடுகிறோம்!'' என்றாள், நாற்பது வயதைத் தாண்டிய பெண்மணி ஒருத்தி.

அந்த டி.வி. நிர்வாகிகளில் அவளும் ஒரு பங்குதாரர் என்பது புரிந்தது.

சம்யுக்தாவிற்கு ஓரளவுக்கு நம்பிக்கை வந்தது.

வந்திருந்த பெண்களில் யாரையும் காத்திருக்கச் சொல்லவில்லை. இவளை மட்டும் காத்திருக்கச் சொல் கிறார்கள் என்றால் திருப்தி வந்திருக்கிறது என்றுதானே அர்த்தம்?

சம்யுக்தாவை அழைத்தனர். முகம் அகன்ற சிரிப்புடன் வரவேற்றனர்.

"வாழ்த்துக்கள் சம்யுக்தா! நேரமுகத் தேர்வில் வெற்றி பெற்றுவிட்டீர்கள். இதோ, வேலை உத்தரவு. நாளை முதலே நீங்கள் பணியில் சேரலாம்!''

'வாவ்.. கடவுளே உனக்கு நன்றி!' சம்யுக்தாவுக்கு சிறகு கள் முளைத்த உணர்வு.

"நன்றி... நன்றி.. மிக்க நன்றி!'' நெகிழ்ச்சியுடன் அவர் களை நோக்கி கரம் கூப்பினாள்.

வீடு திரும்பினாள்.

எப்படி சாலையில் பயணித்தாள் என்றே தெரிய வில்லை. கவனமெல்லாம் எங்கோ சிதறியிருந்தது.

'நாளை முதல் புகழ்பெற்ற டி.வி.யில் என் முகம் தெரியப்போகிறது. இது உண்மைதானா?'

வீட்டுக்குள் நுழைந்ததும் அம்மாவைக் கட்டிப்பிடித்து இரு கன்னங்களையும் எச்சில் படுத்தினாள்.

''என்னடி இது.. சின்ன குழந்தையாட்டம்? என்ன ஆச்சு... நேர்முகத் தேர்வுக்குப் போனாயே?''

''மக்கு அம்மாவே.. அவ்வளவு எளிதாய் கேட்கிறாயே! எவ்வளவு பேர் கலந்துகொண்டார்கள் தெரியுமா? அதில் தேர்வு பெறுவது எளிதான காரியமா?''

''பிறகு ஏன் இந்தக் குதிகுதிக்கிறாய்?''

''பாரேன்.. மறுபடி பேசுவதை? அவ்வளவு பேரிலும் நான் மட்டும்தான் தேர்வானேன்.''

''உண்மையாகவா?'' மோகனாவின் கண்கள் பெரி தாயின.

''பின்னே பொய்யா? பார்த்துக்கிட்டே இரு. என் பெயர் எவ்வளவு பிரபலமாகப் போகுதுன்னு. உன் பிள்ளை கார்த்திக் எல்லோரிடமும் பீத்திக்குவான், 'சம்யுக்தா யார் தெரியுமா? என் சொந்த அக்காவாக்கும்'னு.''

''சாப்பிட்டியா?''

''சந்தோசத்துல பசிக்கலேம்மா.. நான் வெளியே போயிட்டு வர்றேன்!''

''மணி நாலரையாயிடுச்சே.. இன்னும் பசிக்கலையா உனக்கு?''



''விடும்மா.. நான் அப்பாவைப் பார்த்து, விசயத்தைச் சொல்லிட்டு வந்திடுறேன்!''

''ஆறு மணிக்கெல்லாம் அப்பா வீட்டுக்கு வந்துடப் போறார்... நீ எதுக்குப் போகணும்?''

''அதுவரைக்கும் தாங்காதும்மா. நான் உடனே அப் பாவைப் பார்த்துப் பேசியாகணும்!'' வந்த வேகத்திலேயே வெளியேறினாள், சம்யுக்தா.

கடற்கரை சாலையில் காரை மெதுவாக ஓட்டிக் கொண்டிருந்தான், சந்துரு. பக்கத்தில் விஷ்ணு.

இப்படி அலுவலக சிந்தனை இல்லாமல், இளமஞ்சள் வெயிலும்.. சிலிர்ப்புக் காற்றுமாக, சுற்றிலும் பரந்து விரிந்த கடலைப்பார்த்தபடி கார் ஓட்டுவது மனதுக்கு இதமாக இருந்தது. அதுவும் பிடித்த நண்பனிடம் பேசிக்கொண்டே ஓட்டுவது இறுக்கத்தைக் குறைத்தது.

''உன் கல்யாண விசயமாய்ப் பேசணும்னு சொன்னியே! இங்கேயே பேசலாமா? இல்லே, ஏதாவது ஓட்டலுக்குப் போய்...''

''இங்கேயே பேசுவோம், சந்துரு.''

''ம்.. சொல்லு?''

''நீ வீட்டுக்கு வந்து என் அம்மா, அப்பாகிட்டே பேச ணும்!''

''எதைப்பற்றி?''

''எங்க ரெண்டு அண்ணனுக்கும் கல்யாணமான உடனே தனிக்குடித்தனம் அனுப்பின மாதிரி வழக்கம் போல என்னையும் தனிக்குடித்தனம் அனுப்பி வைக்கப் போறாங்களாம்!''

''இதிலென்ன பிரச்சினை உனக்கு?''

''பிடிக்கலேடா... மனைவின்னு ஒருத்தி புதுசா வந்த உடனே பெத்தவங்களை ஒதுக்கிட்டு தனியே, போறது சுயநலம். வயசான காலத்திலேதானே அவங்களுக்கு நம் அனுசரணை அதிகமா தேவைப்படுது? பெரியண்ணி பிரச்சினை பண்ணி தனியே போனதால் எல்லோரையும் அப்படி அனுப்பிடணுமா? எனக்கு, பெத்தவங்களும் முக்கியம் சந்துரு!''

''நல்லது விஷ்ணு! உன் சிந்தனை தெளிவா, மனிதாபிமானத்தோடு இருக்கு. கண்டிப்பா நாளைக்கே வந்து பேசுறேன்.''

சொல்லி முடிக்கவில்லை. பின்பக்கமிருந்து வேகமாக வந்த வாகனம் ஒன்று இவன் காரை இடித்துவிடுவதைப் போல வந்து... கடைசி விநாடியில் நகர்ந்து.. சீறிப் பறந்தது. கூடவே அதில் பயணித்த பெண்ணின் உற்சாகக் குரலும் எழுந்தது.

திகைத்துப்போன சந்துரு, சட்டென காரை நிறுத்தினான்.

மயில்தோகைப் போல் கூந்தல் காற்றில் பறக்க... அழகான உடற்கட்டுடன் கூடிய அவளின் பின்புறம் மட்டும்தான் தெரிந்தது.

''பொண்ணா அவ? ராட்சசி! ஒரு கணத்தில் நடு நடுங்க வச்சிட்டாளே! விடாதே சந்துரு. அவளைப் பிடிச்சு நாலு வார்த்தைக் கேள்'' என்றான், பதற்றத்தில் வியர்த்திருந்த விஷ்ணு.

''சேச்சே... பெண் என்றால் இப்படித்தான் தைரியமா இருக்க வேண்டும். ஏதோ பூரிப்பில் இருக்கிறாள். அதை ஏன் கெடுக்கணும்? விடு'' என்றான், சந்துரு.



வெகுதூரம் சென்ற பின் வண்டியை நிறுத்திவிட்டு திரும்பிப் பார்த்தாள், சம்யுக்தா. 'கார் பின்தொடர்கிறதா என்று!'

இல்லை!

மறுபடி உற்சாகத்துடன் பயணத்தைத் தொடர்ந்தாள்.




கடற்கரையோரம் காலாற நடந்துகொண்டிருந்தான், சந்துரு. பொங்கிவந்த அலை, நாய்க்குட்டியாய் கால்களை நக்கிச் சென்றது.

அப்போது...

படுவேகமாக கரையோரம் தண்ணீரை பீய்ச்சியடித்தப் படி வந்து கொண்டிருந்தாள், சம்யுக்தா.

ஆர்ப்பரிக்கும் அலைகடலின் சத்தத்தைத் தவிர வேறெதுவும் அவனைக் கவரவில்லை.

அடுத்த கணம்...

பீய்ச்சியடிக்கப்பட்ட தண்ணீரால் தாக்குண்டவனுக் குள். ஒரு நொடியில் நாசியை தீண்டிவிட்டுப் போன அப்பெண்ணின் கேசத்தின் நறுமணம், ஜிவ்வென்று உள்ளிறங்கியது.

''ஏய்.. ஏய்..'' என்று அவன் சுதாரித்து கத்துவதற்குள் வெகுதூரம் சென்றுவிட்டிருந்தாள், அப்பெண்.

பார்க்கவில்லை.

அவளது முகத்தைப் பார்க்கவில்லை.

சாம்பல் நிற வண்டி. பதிவு எண், ஒன்பது என்ற எண்ணுடன் முடிந்தது.

'யாரிவள்? அன்று கூட கார் மீது மோதுவதைப் போல் வந்தவள் இவள்தானே? இதே வண்டிதான்!'

சந்துருவைப் பிடித்து யாரோ உலுக்கினார்கள்.

"என்னாச்சு சந்துரு.. ஏன் அலறினே?"

திடுக்கிட்டு கண் திறந்தான்.

அம்மா, பயத்துடன் பக்கத்தில் நின்றிருந்தாள்.

புரிந்தது.

அத்தனையும் கனவு.

"என்ன சந்துரு.. ஏய்.. ஏய்னு யாரை கத்தினே? திருடன் யாராவது?"

"இல்லைம்மா... ஏதோ கனவு.. என்னை மீறி கத்தியிருக்கேன்!"

"கனவா?"

"ஆமாம்மா!"

"வயசுப்பிள்ளை.. இன்னும் பிரமச்சாரியா சுத்திக்கிட்டு வந்தா.. காத்து, கருப்புன்னு..."

"அம்மா ப்ளீஸ்... இந்த மாதிரியான மூடநம்பிக்கைகளில் எனக்கு நம்பிக்கை இல்லே... என்னை விட்டுருங்க. இன்னைக்கு அப்பாவை மருத்துவ பரிசோதனைக்கு அழைச்சிட்டுப் போகிற நாள், நினைவிருக்கா?"

"வீட்டுக்கே வர்றேன்னு டாக்டர் சொல்லிட்டார். அப்பாவைப் பற்றிக் கூட இல்லே சந்துரு.. வரவர


உன்னைப் பற்றிதான் நான் ரொம்ப கவலைப்படுறேன்!"

"இது அநாவசியமானது.. அவ்வளவுதான் சொல்லுவேன்" என்றபடி குளியலறை நோக்கிச் சென்றான்.

பூத்தூவலாய் சிதறிய தண்ணீரில் நின்றவனுக்கு அந்தக் கனவு நினைவுக்கு வந்து சிரிப்பைத் தந்தது.

இதே கனவு.. கிட்டத்தட்ட ஒரு மாதமாய் அடிக்கடி வருகிறது. அது ஏன்?

யாரவள்?

என்னையே குறிவைத்து மோத வருகிறாளே?

வியந்தான்.

ஒரு வழியாய் குளித்து முடித்தான்.

"சோழா ஓட்டலில் ஓவியக் காட்சி நடக்குது. வர்றியா விஷ்ணு? போகலாம்!"

"ஐயா சந்துரு.. என்னை ஆளை விடுப்பா. நான் சும்மா இருந்தால் கூட வரமாட்டேன். கல்யாண வேலை தலைக்கு மேலே இருக்கு. எனக்கு இந்த ஓவியக் காட்சி, புத்தகக் காட்சி இதிலெல்லாம் ஆர்வமில்லே. நீ எப்படிடா, இதுக்கெல்லாம் நேரம் ஒதுக்குறே?"

"ரசனையே இல்லாத உனக்கெல்லாம் அதைச் சொல்லிப் புரியவைக்க முடியாது. நேரமாச்சு. நான் புறப்படணும்!" என்று, தொலைபேசியை வைத்தான், சந்துரு.

அடுத்த பத்தாவது நிமிடம் தன் அலுவலகத்தை விட்டு வெளியில் வந்தான்.

நான்கு மாடி கட்டிடம், அது! சந்துருவுக்குச் சொந்தமானது. அந்த ஒரே கட்டிடத்தில் வெவ்வேறு தளத்தில் அவனது நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

சந்துரு, தனக்கென ஓட்டுநர் வைத்துக்கொள்ள வில்லை. வேகமாக கார் ஓட்டுவது அவனுக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. காரை தானே ஓட்டினான்.

ஓட்டலில் காரை நிறுத்திவிட்டு, இறங்கி நடந்தான். ஓவியக் காட்சி நடைபெறும் மூன்றாவது மாடியை நோக்கி பயணித்தான்.

அவன் எதிர்பார்த்ததை விடவும் ரசனையாளர்கள் கூடியிருந்தனர்.

சுவரில் வரிசையாய் ஓவியங்கள்.

எறும்பு ஊர்வது போல, மெல்ல நகர்ந்தபடி ரசித்துக் கொண்டிருந்தனர், பார்வையாளர்கள்.

விதவிதமாய் கற்பனைகளை வண்ணத்தில் கரைத்து உயிரூட்டியிருந்தாள், சம்யுக்தா.

ஆம்.. அது அவள் வரைந்த ஓவியங்களின் காட்சிதான்.

பார்வையாளர் ஒருவர், ஓவியம் குறித்துக் கேட்ட சந்தேகத்திற்கு பதில் அளித்துக் கொண்டிருந்த சம்யுக்தா வின் கண்களில் அவன் பட்டான்.

'பேண்ட் பாக்கெட்'டில் கைவிட்டுக்கொண்டு, உதட்டைக் கடித்தபடி அவன் நின்றிருந்த கம்பீரம்.. மறுமுறையும் பார்க்க வைத்தது.

சில கணங்கள்தான். அதன்பின் தன் காரியத்தில் மூழ்கிப்போனாள், சம்யுக்தா.

அடர்ந்த பசுமை நிறைந்த காடு. மரங்களில் அமர்ந் திருந்த சின்னஞ்சிறு பறவைகள். சருகுகள் நிறைந்த பூமி. இரண்டு கிளைகளைக் கடந்து எட்டிப் பார்த்த சூரியனின் வெளிச்சக் கோடுகள்.



'வாவ்!' என்று சிலாகித்தான், சந்துரு.

'அருமை.. அற்புதம்!'

வெகு நேரம் அந்த ஓவியத்தையே உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தான்.

பிறகு, அதை விலை கொடுத்து வாங்கினான்.

பணம் செலுத்தி, ரசீதை வாங்கியவனின் கண்களில் அவள் பட்டாள்.

சத்தமின்றி ஒரு பெண்ணுடன் சிரித்துப் பேசியபடி, அவள்.

நேர்த்தியான, எளிமையான அலங்காரத்தில், வெண் பட்டு சுடிதாரில் அம்சமாகத் தெரிந்தாள். அழகாக இருந் தாள்.

இரண்டு, மூன்று முறை அவளைத் திரும்பிப் பார்த் தான். இது, அவனுக்கே புதிய விசயம். நிறைவான அம்சங் களுடன் அவள் இருப்பதாகத் தோன்றியது.

பாக்கெட்டிலிருந்த செல்பேசி அலறியது.

அலுவலகத்தில் ஒரு குழப்பம். உடனடியாக வந்தால் நன்றாக இருக்கும் என்று உதவியாளர் அழைத்தார்.

''அற்புதம் மிஸ் சம்யுக்தா! காட்சிகளை கண் முன் அப்படியே நிறுத்தி இருக்கீங்க'' நாற்பத்தைந்து வயது பெண்மணி, சம்யுக்தாவின் கைப்பிடித்து பாராட்ட... அவளைச் சுற்றி கூட்டம் கூடியது.

''டி.வி.யில் நிகழ்ச்சிகளை அழகா தொகுத்து வழங் குறீங்க. தமிழைத் தப்பு இல்லாமல் உச்சரிக்கிறீங்க. அநா வசியமா சிரிக்காம, கண்ணியமாக வசியப்படுத்துறீங்க.''

''நன்றி.. நன்றி சார்!''

பாராட்டு மழையில் நனைத்துக் கொண்டிருந்தாள், சம்யுக்தா!

வண்ண விளக்குகள் பொருத்தப்பட்டிருந்த சுவரில், தான் வாங்கி வந்த ஓவியத்தை மாட்டினான், சந்துரு. விளக்குகளின் வெளிச்சத்தில் ஓவியம் மேலும் மெருகேற.. தன் அறை மிகுந்த அழகுடன் தோன்றுவது போலிருந்தது, அவனுக்கு.

பார்க்கப் பார்க்கச் சலிக்காத காட்சி. சருகுகள் முனக, தானே அங்கு நடப்பது போல் தோன்றியது.

அருகே சென்று பார்த்தான். ஓவியத்தின் கீழே ஓரமாய் 'சம்யுக்தா' என்று அழகான எழுத்துக்கள் மிளிர்ந்தன.

ஓவியத்தைப் போல பெயரும் எவ்வளவு அழகு? அந்த ஓவியரைப் பாராட்டினால் என்ன? கலைஞனுக்கு இதுபோன்ற பாராட்டுகள்தானே ஊக்க மருந்து.

நினைத்ததை உடனே செயல்படுத்தினான்.

ஓவியக் காட்சியை ஏற்பாடு செய்தவரை தொடர்பு கொண்டு சம்யுக்தாவின் தொலைபேசி எண்ணை பெற்றான்.

கசகசப்பு நீங்க.. வழக்கமாய் போடும் இரவுக் குளியலை முடித்துவிட்டு - சோப்பு மணம் கமழ, இரவு உடையில் - கட்டிலில் வந்தமர்ந்தாள், சம்யுக்தா.

குறுமேசை மீதிருந்த தொலைபேசி அலறியது.

சலித்துப்போனாள். காரணம் - ஏகப்பட்ட அழைப்புகள். யார் யாரோ, முகம் தெரியாதவர்களெல்லாம் பாராட்டினார்கள். ஆனந்தமாய் இருந்தாலும், அளவு மீறும்போது சலிப்பு ஏற்படத்தானே செய்யும்?



எடுத்து ''அலோ'' என்றாள்.

''அலோ.. சம்யுக்தா மேடம் இருக்காங்களா?'' கணீரென ஆண்குரல்.

''சம்யுக்தாதான் பேசுறேன்!''

''மேடம்.. இன்னைக்கு நடந்த உங்க ஓவியக் காட்சிக்கு நானும் வந்திருந்தேன். ரொம்ப அருமையா படம் வரைஞ்சிருக்கீங்க!''

''ரொம்ப நன்றிங்க!''

''எனக்கும் படம் வரைவதில் ஈடுபாடு அதிகம். வேறு தொழிலில் இறங்கிவிட்டதால் ஒரு கட்டத்துக்கு மேலே தொடர முடியலே!''

''அப்படியா?'' கொட்டாவி விட்டாள்.

''ஓவியத்தைப் போல உங்களுக்குக் குரலும் இனிமை. ஓவியம் வரைவதைத் தவிர வேறு என்னென்ன பண்ணுறீங்க மேடம்?''

''ஏதுங்க நேரம்? எனக்கு மூணு குழந்தைங்க. வீட்டையும், குழந்தைகளையும், கணவரையும் பார்த்துக்கவே நேரம் சரியா இருக்கு. கிடைக்கிற கொஞ்ச நேரத்திலே தான் ஓவியம் வரையுறேன்!'' சிரிப்பை அடக்கியபடி சொன்னாள்.

சந்துருவுக்கு ஆச்சரியம்.

'குடும்பப் பொறுப்பை சுமந்துள்ள பெண்மணி வரைந்தவையா? பெரிய விசயம்தான்!'

மேலும் சில வார்த்தைகளை பேசிவிட்டு வைத்தான்.

சம்யுக்தாவோ விழுந்து விழுந்து சிரித்தாள். ''சரியான ஜொள்ளு!''என்றாள், வாய்விட்டு.



# 5

பொன் மாலைப்பொழுது!

சந்தானமூர்த்தி அதிசயமாய் அன்று நாலரை மணிக்கெல்லாம் வீடு திரும்பியிருந்தார்.

காலையில் அவசரத்தில் பார்த்துவிட்டுப் போன தினசரியை எடுத்து, நிதானமாக படித்தார்.

தோட்டத்தில் நாய்கள் குரைத்துக் கொண்டிருந்தன.

அவர் எதிரே இருந்த குறுமேசையின் முன்பு சுடச்சுட முந்திரிப் பக்கோடாவை வைத்தாள், மோகனா.

"சூடா இருக்கு... சாப்பிடுங்க!"

பத்திரிகையை மடித்து வைத்த சந்தானமூர்த்தி, கொஞ்சம் எடுத்து வாயில் போட்டு சுவைத்தார்.

"நாய்கள் ஏன் கத்திக்கிட்டிருக்கு? கட்டிப்போடலையா?"

"உடம்புக்கு முடியலேன்னு நினைக்கிறேன். சரியா சாப்பிடுறதில்லே. கத்திக்கிட்டே இருக்கு!"

"ஆஸ்பத்திரிக்கு அழைச்சிட்டு போகச் சொல்றது தானே!"

"சமி அழைச்சிட்டு போறேன்னு சொன்னா.. வந்துடுவா!"

"ஏன்.. சமிதான் போகணுமா? கல்லூரியிலிருந்து கார்த்திக் வந்துட்டான்ல? அவன் போகட்டுமே..."

"........"



"கார்த்திக் எங்கே?"

"டி.வி. பார்த்துட்டிருக்கான்!"

"ரொம்ப முக்கியம். உபயோகமா ஏதாவது பண்ணணும்னு அவனுக்குத் தோணுதா? எந்நேரமும் சாப்பிடணும், டி.வி. பார்க்கணும். ஆனா, படிப்பு ஏறலே. இப்படி இருந்தா அவன் எதிர்காலம் என்னாகிறது?"

"சின்னப்பிள்ளைதானே? இப்ப அப்படித்தான் இருப்பான்ங்க. நாம கவலைப்படுற அளவுக்கு அவன் மோசமானவனில்லே."

"உன் பிள்ளையைப் பற்றி சொன்னா மட்டும் உனக்கு கோபம் பொத்துக்கிட்டு வந்துடும். அவன் வயசுல நான் அப்படியா இருந்தேன்?"

"உங்கக் காலத்துல ஏது டி.வி.? என் மாமனார் சாதாரண தபால்காரர். நடுத்தர குடும்பம். அதனால.. பொழுபோக்க வேறு வழியில்லாம படிப்பே கதின்னு இருந்தீங்க. நல்ல வேலை, அதைத் தொடர்ந்து வசதி - வாய்ப்புகள்னு வந்தது. என் பிள்ளை அப்படியா? பிறக்கும்போதே பணக்காரனா பிறந்தவனாச்சே?"

"இதில் வேறு பெருமைப்பட்டுக்கிறியா? உன்னை நினைச்சு, சிரிக்கிறதா, அழுறதான்னே தெரியலே. நாட்டிலே பெரும்பாலான இளைஞர்கள் வேலை இல்லாம திரியுறதுக்கு என்ன காரணம் தெரியுமா? உன்னை மாதிரியான அம்மாக்கள்தான்! இப்படி செல்லம் கொடுத்து, கெடுத்து வச்சிருக்கிறதுதான்.

சம்யுக்தாவை பார்! அவளுக்கு நாம ஏதாவது சொல்லிக் கொடுத்தோமா? சுதந்திரம் கொடுத்தோம். அதை எவ்வளவு அழகா பயன்படுத்திக்கிட்டா. அவ சும்மா

உட்கார்ந்து பார்க்க முடியுதா? எல்லாத் துறையிலேயும் கால் பதிச்சு பேர் வாங்கிடுறா. சம்யுக்தாவோட அப்பா தானே நீங்கன்னு கேட்கிறப்ப.. எவ்வளவு சந்தோசமா இருக்கு? அதை கார்த்திக்கும் தரணும்ங்கிறதுதானேடி பெத்தவனோட எதிர்பார்ப்பா இருக்கும்?''

''மாறிடுவான்ங்க...'' அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, திறந்துகிடந்த கேட்டை கடந்து வண்டியில் வந்தாள், சம்யுக்தா.

அப்பாவைப் பார்த்ததும் அவள் முகத்தில் ஆச்சரியம்.

''நான் காண்பது நனவுதானா? மாலை சூரியன் இருக்கும் போதே வீட்டில் அப்பாவை காண்பது உண்மைதானா?''

''என்னடா சமி.. அப்பாவையே கிண்டல் பண்ணுறியா?''

''கிண்டல் இல்லேப்பா.. மகிழ்ச்சி!''

''உட்காரும்மா!''

''அமர்ந்தேன்!''

அப்பாவுக்கு வெகு பக்கத்தில் நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்து தோளில் கைப்போட்டுக் கொண்டாள்.

''பார்த்துக்கிட்டே நிக்கிறியே.. போய் சமிக்கும் பக்கோடா, காபி கொண்டு வா!''

''அய்யோ.. வேணாம். எடை கூடும்.. கொஞ்சம் காபி மட்டும் போதும். அதுவும் என் அப்பாவுக்காக.''

''புரிஞ்சுதா உங்க சமியைப் பற்றி. போகிற போக்குல தண்ணியைக் கூட அளந்துதான் குடிக்கப்போறா. பொண்ணுங்க பூசின மாதிரி இருந்தாதான் அழகு'' தாய் பேசிக் கொண்டே போக.. மற்ற இருவரும் சிரித்துவிட்டனர்.

''அவ கிடக்கிறா... விடு சமி! டி.வி.யில் இருந்து வர்றியா?''



''இல்லேப்பா.. காலையிலேயே என் நிகழ்ச்சிக்கான ஒளிப்பதிவை முடிச்சிட்டாங்க. இப்ப நான் ஸ்டூடியோவில் இருந்து வர்றேன்!''

''அங்கே என்ன?''

''ஏற்கனவே சொல்லி இருந்தேனேப்பா.. ஒரு ஆடியோ நிறுவனம் பக்திப் பாடல்களை பாடித்தரச் சொல்லி கேட்டிருக்காங்கன்னு?''

''ஆமாம்.''

''இன்னைக்கு ஒலிப்பதிவு. மொத்தம் ஒன்பது பாடல். நான்கு பாடலை பாடி முடிச்சிட்டேன். மீதியை ரெண்டு நாளில் முடிச்சிடுவோம்!''

சந்தானமூர்த்தி மகளின் முகத்தைக் கைகளால் ஏந்தி, பரவசத்துடன் பார்த்தார். உச்சந்தலையில் முத்தமிட்டார்.

''என் கண்ணே பட்டுடும் போலிருக்கு, சமி. என்ன தவம் பண்ணினேன், நீ என் மகளாய் பிறக்க?'' என்றார், நெகிழ்வுடன்.

''என்னப்பா இப்படி சொல்றீங்க? நான் பிறந்து, முழுக்க என் சொந்த முயற்சியிலே உயர்ந்துடலையே! உங்க உழைப்பு, உங்களோட ஊக்கம் இவைதானேப்பா காரணம்? சராசரி அப்பாக்கள் மாதிரி, மகள் வயசுக்கு வந்த உடனே கடமையை முடிச்சிடணும்னு அவசர அவசரமா கல்யாணம் பண்ணிக் கொடுத்துடலையே!''

''ஆனா, எல்லாத்தையும்விட சாதிக்கிறதுக்கு ஆர்வமும், சுயமுயற்சியும் ரொம்ப அவசியமில்லையா? என் சமிக்குட்டிக்கு அது நிறையவே இருக்கு!''

மனசு நிறைந்து தழும்ப, மகளை பெருமிதத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார், வெகுநேரம்.

பல்பொருள் அங்காடி!

பிரசித்திப்பெற்ற கடை என்பதால் கூட்டத்துக்கும், விற்பனைக்கும் குறைவில்லை.

லெட்சுமியம்மாள் தன் வேலைக்காரப் பெண்ணுடன் வந்திருந்தாள்.

அங்கே ஒலிநாடா ஒலித்தது.

புதிய - இனிமையான குரல்! லெட்சுமியம்மாவை ஈர்த்தது.

வீட்டில் பால்கனியில் வந்து நின்ற சந்துருவை, வீட்டுத் தோட்டம் கவர்ந்தது.

விதவிதமான வண்ணங்களில்.. வகைகளில் ரோஜா மலர்கள்!

அப்போதுதான் செடிகளுக்கு நீர்பாய்ச்சி இருந்ததால் இளம்வெயிலில் ஒவ்வொரு இதழ்களும் வெண்முத்துகளால் பளபளத்தன.

சற்று நேரம் அவைகளையே ரசித்தவன், நேரம் கரைவதை உணர்ந்து குளியலறைக்குச் சென்றான்.

குளித்து முடித்து, உடை மாற்றி ஜம்மென்று மாடிப்படிகளில் இறங்கி வந்தவனை - அந்தக் குரல் புருவத்தை உயர்த்த வைத்தது.

வழக்கமாய் இந்த நேரத்தில் வீட்டில் சுப்ரபாதம் ஒலிக்கும். இன்றும் ஒலித்தது. ஆனால், வழக்கமான குரல் அல்லவே!

புதியதாய், இளமையாய், இனிமையாய் ஒரு குரல். சற்று நேரம் கண்மூடி ரசித்தான்.

பாடல், ஐஸ்கிரீமாய் உணர்வுகளுக்குள் இறங்கி கலந்தது.



''வாப்பா.. உட்காரு!'' உணவு மேசையருகே இவனுக்காக தயாராய் நின்றிருந்தாள், லெட்சுமியம்மா.

''அப்பா எங்கேம்மா? இன்னும் சாப்பிட வரலையா?''

''களைப்பா இருக்கு.. சாப்பாட்டை அறைக்கே அனுப்பிடுன்னு சொன்னார். சாப்பிட்டு முடிச்சிட்டார்.''

''ஆமா. சுப்ரபாதம் நல்லா இருக்கே... குரல் கூட வித்தியாசமா தெரியுதே?''

''ஆமாம் சந்துரு... புதுசா ஒரு பொண்ணு பாடி இருக்காளாம். கடைக்குப் போயிருந்தப்ப வாங்கினேன்!''

''ஆப்பம் நல்லா இருக்கு.. இன்னொன்று போடும்மா! அப்புறம், இந்தக் குரல் அம்சமாக இருக்கில்லே?''

''வேலைக்காரர்கள் உதவ - மகனுக்குப் பரிமாறிய லெட்சுமி, ''அருமையா இருக்கு, சந்துரு. சின்ன வயசு பொண்ணுதான். பெயர் கூட என்னவோ போட்டிருந்துச்சு... ஞாபகத்துக்கு வரலே.

சும்மா சொல்லக்கூடாது. உயிரைத் தொடும் உருக்கம். குரல் வளம். எம்.எஸ். சுப்புலட்சுமிக்கு இணையாய் இருக்கு. கடவுளோட ஆசீர்வாதம் அந்தப் பொண்ணுக்கு நிறையவே கிடைக்கும்!'' வாயாரப் புகழ்ந்தாள், லெட்சுமி.



## 6

நிலா தொலைக்காட்சி அலுவலகம்.

நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிக் கொண்டிருந்த சம்யுக்தா, நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு வெளியில் வந்தாள்.

பருத்தி சேலை - ரவிக்கை. மெல்லிய 'மேக்கப்' விரித்துப் போடப்பட்டிருந்த அடர்ந்த பளபளப்பான கூந்தல்.

அவள் நடந்துசென்ற அழகை இமைக்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாள், மாளவிகா. சக தொகுப்பாளினி.

அலுவலக வளாகத்துக்குள் சின்ன பூங்கா இருந்தது. சம்யுக்தா அமர்ந்தாள்.

சிற்றுண்டி டப்பாவை எடுத்தாள்.

அதனுள்ளே துண்டுகளாய் நறுக்கப்பட்ட கேரட், வெள்ளரிக்காய். எடுத்து உண்டாள்.

"உன் பட்டு மேனிக்கும், பளபளப்புக்கும் காரணம் என்னவென்று இப்போது புரிந்துவிட்டது" என்றபடி எதிரே வந்தமர்ந்தாள், மாளவிகா.

"வாங்க மாளவிகா.. சாப்பிடுங்களேன்!" என்றபடி அவள் முன் நீட்டினாள்.

"பரவாயில்லை! உன்னைப் பார்க்க எனக்கே பொறாமை யாக இருக்கிறது, சம்யுக்தா!"

"இருக்காது. இருந்திருந்தால் இப்படி பளிச்சென்று என்னிடமே உடைத்து சொல்லியிருக்கமாட்டீர்கள்" அழகாய் புன்னகைத்தாள்.

"ஆனால், மகிழ்ச்சிக்குரிய பொறாமைதான். நீ இந்த டி.வி.யில் சேர்ந்து முழுதாய் மூன்று மாதம் முடியவில்லை. ஆனா, உன் திறமைக்கும், அழகுக்கும் உடனடியா பரிசு



கிடைத்துவிட்டதே! வெறும் நிகழ்ச்சி தொகுப்பாளரா மட்டுமே இருந்த உனக்கு செய்தி வாசிக்கவும், தனியே நிகழ்ச்சியைத் தயாரித்து வழங்கும் பொறுப்பையும் கொடுத்திருக்கிறார்கள் என்றால் எவ்வளவு பெரிய விசயம்? தினமும் உன் முகவரி கேட்டும், காதலிக்க அனு மதி கேட்கும் நூற்றுக்கணக்கில் கடிதங்கள் வருகிறது. நேயர்களின் இதயத்தில் சிம்மாசனம் போட்டு அமர்ந்து விட்டாய்."

அவளின் புகழ்ச்சிக்கு என்ன பதில் சொல்வது என்று புரியாமல் இருந்தாள்.

"இரண்டு தொடரில் நடிக்கக் கூப்பிட்டார்களே.. என்ன முடிவு பண்ணியிருக்கே, சம்யுக்தா?"

"அப்பவே முடியாதுன்னு சொல்லிட்டேன்!"

"ஏன் சம்யுக்தா? எவ்வளவு பெரிய வாய்ப்பு? அவங்க வங்க ஒரு சின்ன வேடமாவது கிடைக்காதான்னு அலையு றாங்க. நீ என்னடான்னா.. தேடிவந்த வாய்ப்பை வேண் டாம்னு உதறித் தள்ளியிருக்கே! நடிச்சா.. இன்னும் பிரபலமாகலாமே?"

"தப்பா புரிஞ்சுக்கிட்டிருக்கீங்க. எனக்கு பிரபலமாக ணும்ங்கிற கனவெல்லாம் கிடையாதுங்க. சின்ன வயசுல எதையாவது கிறுக்கிக்கிட்டிருப்பேன். அப்பா அதைப் பார்த்து ஊக்கப்படுத்தினார். அதனால் இன்னைக்கு ஓவியராகிட்டேன். டி.வி.யிலே செய்தி வாசிக்கணும்ங் கிறது மட்டும்தான் என்னோட மிகப்பெரிய ஆசை! முக்கியமான நாட்டு நடப்புகளை நான் வாசிக்க.. உலகமே கேட்கணும்னு ஆசைப்பட்டேன். நிறைவேறிடுச்சு. மத்தபடி நடிப்பு மேலே எனக்கு ஈர்ப்பு இல்லே!"

"வித்தியாசமான பெண்ணாக இருக்கியே!" என்றாள், வியப்பாய்.

தந்தையின் அறையிலிருந்து மகிழ்ச்சியுடன் வெளிப்பட்டான், சந்துரு.

சோபாவில் அமர்ந்தான். அண்ணாந்து நீண்டதொரு மூச்சை வெளியிட்டான்.

லெட்சுமியம்மாள் அவன் எதிரே இருந்த குறுமேசை மீது பாதாம் அல்வாவையும், முந்திரி பக்கோடாவையும் வைத்தாள்.

"சாப்பிடுப்பா, சந்துரு! நீ இன்னைக்கு ரொம்ப உற்சாகமாக இருக்கிற மாதிரி தெரியுதே?"

"ஆமாம்மா.. ரொம்பவே சந்தோசமாகத்தான் இருக்கிறேன். அட... அதுக்கு தோதா நீயும்தான் எனக்கு பிடிச்ச பாதாம் அல்வா செய்திருக்கே!"

"எல்லாம் அந்த மகிழ்ச்சியான செய்தியைக் கேட்டுதான்!"

"என்ன செய்தி? சொல்லேன் பார்ப்போம்!" என்றவனாய் சின்னக் கரண்டியால் அல்வாவை எடுத்து வாயில் போட்டுக்கொள்ள.. அல்வா வழுக்கிக் கொண்டு சென்றது.

"நம்ம கம்பெனியோட பங்குதான் இன்னைக்கு பங்கு மார்க்கெட்டுலே உச்சத்துல இருக்குதாமே?"

"அட.. ஆமாம்மா! உனக்கெப்படி தெரியும்? யாராவது போன் பண்ணி சொன்னாங்களா என்ன?" என்றான், வியப்புடன்.

"சொன்னாங்க. ஆனா, போனில் இல்லே.. டி.வி. யிலே!"



"டி.வி.யிலேயா? என்னம்மா சொல்றே?"

"ஆமாம்ப்பா... கொஞ்ச நேரம் முன்னாடிதான் டி.வி. செய்தியிலே சொன்னாங்க!"

"அப்படியா? மறுபடி எப்ப செய்தி?"

"இன்னும் பத்து நிமிடத்திலே!"

"சரி.. அதுக்குள் சூடா ஒரு காபி கொடுத்துடும்மா!"

லெட்சுமி அகன்றாள். மகன், தொலைக்காட்சியை உயிர்ப்பித்தான்.

காபியும் வந்தது. சற்று நேரத்தில் செய்தியும் தொடங்கியது.

"வணக்கம்!" என்றபடி சின்னத்திரையில் புன்னகை மலர சொன்ன அந்த இளம் அழகியை ஆச்சரியமாய்ப் பார்த்தான், சந்துரு.

'யாரிவள்? இதற்கு முன் எங்கோ பார்த்திருக்கிறேனே... ஆனால், நிச்சயமாய் டி.வி.யில் இல்லை. உயிருள்ள ஓவியமாய், என் கண் முன்னே நடமாடி இருக்கிறாள். எங்கே.. எப்போது?'

ஆழமாய் யோசித்தான். பிடிபடவில்லை!

செய்தி தொடர்ந்தது.

அலட்டிக்கொள்ளாமல் நேர்த்தியாய் உச்சரிக்கும் தமிழ்! கருணை தேங்கி நிற்கும் வசீகரக் கண்கள். வார்த்தைகளுக்கேற்ப குவிந்து விரியும் இதழ்கள், மிதமான ஒப்பனை, மெல்லிய பட்டுச்சேலையும், மல்லிகைச் சரமும்.. பார்த்துக் கொண்டேயிருக்கச் சொன்னது.

என்ன அழகு!

வேலைக்காரனை அழைத்து காபி கோப்பையை எடுத்துச்செல்ல பணித்த லெட்சுமி, மகனின் எதிரே அமர்ந்தாள்.

அம்மாவைப் பார்த்த சந்துரு, ''யாரும்மா இந்தப் பொண்ணு? நல்லா செய்தி வாசிக்கிறாளே? புதுமையாக உச்சரிக்கிறேன் பேர்வழின்னு இப்ப தமிழை கொலைப் பண்ணுறாங்க!''

''புதுசா.. பத்து நாளாதான் வாசிக்கிறா!''

''நம்ம செய்தியை எப்ப வாசிப்பா?''

''என்னது? எப்ப வாசிப்பாளா? அதான் படிச்சிட்டாளே!''

''எப்ப?'' குழம்பிப் போனான்.

வெட்கமாகவும் இருந்தது.

'அவளைப் பற்றிய சிந்தனையிலேயே செய்தியைக் கோட்டை விட்டுவிட்டேனே!'

''என்னமோப்பா... இப்படி ஒத்தையாளா.. கம்பெனி அது இதுன்னு நாள் பூரா ஓடிட்டிருந்தா உடம்பும், மனசும் என்ன இயந்திரமா? உன்னை உன்னால கவனிச்சுக்க முடியாது... அதான் இந்தக் கவனபிசகு! அதுக்குத்தான் சொல்றேன். சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கிட்டா உன்னைக் கவனிக்க மனைவி இருப்பா!''

''நான் மாட்டேன்னா சொல்றேன்? பண்ணிக்கிறேன்ம்மா! ஆனா, என் மனசுக்கு பிடிக்கவேணாமா?''

''எந்தப் பொண்ணையுமே பிடிக்கலைங்கிறே.. உனக்கு எந்த லோகத்திலே போய் பெண் தேடுவேன்?'' என்று அங்கலாய்த்தாள், லெட்சுமி.

''கல்யாணம்ங்கிறது சாதாரண விசயமா? அவசரப் பட்டு முடிவெடுத்திட முடியுமா?''



''எப்படிப்பட்ட பொண்ணு வேணும்னுதான் சொல்லேன்... தேடுறேன்!''

''டி.வி.யில் வந்தவளைப் போல!'' என்றான், விளையாட்டாக.

லெட்சுமி அந்தப் பெண்ணை நுணுக்கமாய் ஆராய்ந்தாள்.

''பாந்தமா.. அழகா இருக்காயில்லே, இந்தப் பொண்ணு? சரி.. இந்த மாதிரியே தேடிப்பிடிச்சு உன் முன்னாடி நிறுத்தறேன்! சந்துரு.. இவளை எங்கோ பார்த்திருக்கிறேன்ப்பா!''

''அதான்..எப்பப் பார்த்தாலும் டி.வி. முன்னாடி உக்காந்துடுறீங்களே, அப்ப பார்த்திருப்பீங்க.''

''இல்லே சந்துரு... இவளை வேறெங்கோ பார்த்திருக்கிறேன்!'' என்றாள், யோசனையாய்.

''இதே குழப்பம்தான்ம்மா, எனக்கும். அதனாலதான் செய்தியைக் கேட்கத் தவறிட்டேன். இவளை நானும் எங்கோ பார்த்திருக்கிறேன். ஆனா, எங்கேன்னுதான் தெரியலே.''

''நீ தேனீ மாதிரி பறந்திட்டிருக்கிற உழைப்பாளி! எங்கேயாவது பார்த்திருக்க வாய்ப்பிருக்கு. ஆனா, வீட்டுக்குள்ளேயே இருக்கிறவ, நான். எப்படிப் பார்த்திருக்க முடியும்? சரி.. இந்தப் பேச்சை விடு! நாமெல்லாம் எப்ப திருப்பதி போறோம்?''

''எதுக்கும்மா?''

''என்ன இப்படி கேட்டுட்டே? ஒவ்வொரு தடவையும் கம்பெனியிலே கிடைக்கிற லாபத்திலே ஒரு பகுதியை திருப்பதி உண்டியலில் போடுவியே.. அதுக்குத்தான்!''

"இல்லேம்மா.. இந்தத் தடவை என் திட்டத்திலே சின்ன மாற்றம்!"

"என்னப்பா மாற்றம்?"

"சுனாமியால் பாதிக்கப்பட்டு அநாதைகளான ஐம்பது சிறுவர், சிறுமியரை தத்தெடுத்து அவர்கள் பெயருக்கு அந்தப் பணத்தைப் பாங்கியில் போடப் போகிறேன்."

சந்துருவை பிரமிப்புடன் பார்த்தாள், லெட்சுமி.



## 7

உள்ளிடப்பேசி ஒலித்தது.

"சார்... உங்க நண்பர் விஷ்ணு வந்திருக்கிறார்" என்றாள், வரவேற்பாளினி வந்தனா.

"அனுப்புங்க!" என்றான், சந்துரு.

சற்று நேரத்தில் உள்ளே நுழைந்தான், விஷ்ணு.

"என்ன மாப்பிள்ளே.. இவ்வளவு கெடுபிடி? எப்பவுமே பார்த்ததும் 'உள்ளே போங்க சார்'னு சொல்றவங்க இன்னைக்கு 'ஒரு நிமிடம்.. சார்கிட்டே கேட்டுட்டு சொல்றேன்'னு உட்கார வச்சிட்டாங்க! என்கிட்டேயே பந்தாவா?"

"தப்பா எடுத்துக்காதேடா... முதல்ல உட்காரு. என்ன சாப்பிடுறே?"

"ஒண்ணும் வேணாம்! உன்னைப் பற்றித்தான் வெளியிலே பரபரப்பா பேசிக்கிட்டிருக்காங்க. அதைக் கேட்கத்


தான் வந்தேன். என்கிட்டே கூட சொல்லவே இல்லையே! சுனாமியால் பாதிக்கப்பட்ட ஐம்பது குழந்தைகளை தத்து எடுத்து, ஒவ்வொருத்தருக்கும் பாங்கியிலே பணம் போட்டிருக்கியாமே..உண்மையா?"

"ம்.."

"ஏன் என்கிட்டே சொல்லலே?"

"மத்தவங்க எனக்கு உதவினா சொல்லலாம். ஆனா, நான் மத்தவங்களுக்கு உதவுறதைச் சொல்லிப் பெருமைப் பட்டுக்கிட்டா.. அப்புறம் உதவி செய்யுறதுக்கு அர்த்த மில்லாம போயிடும்! அதனால்தான் சொல்லலே."

நண்பனை பெருமையுடன் பார்த்தான், விஷ்ணு.

"கேட்கவே சந்தோசமா இருக்கு, சந்துரு! அவனவன் பிச்சைக்காரிக்கு ஒரு ரூபாய் தானம் பண்ணினால்கூட நம்மை யாராவது கவனிக்கிறாங்களான்னு சுற்றுமுற்றும் பார்க்கிற உலகம் இது. நீ என் நெருங்கிய நண்பன். வலக்கை கொடுப்பதை, இடக்கை அறியாமல் நீ செய்த இந்த நல்ல காரியம், மனதை நிறைய செய்துவிட்டது, சந்துரு!" நெகிழ்ச்சியுடன் வெளிப்பட்டன வார்த்தைகள்.

"சரி.. நீயும் இதையே பேசி போரடிக்காதே.. வேறு ஏதாவது பேசு!"

"சரி.. இதற்கும், என்னை வெளியில் நிறுத்தி வைத்ததற்கும் என்ன காரணம்?"

"இதேதான் காரணம்! என்னைப் பாராட்டணும்னு நிறைய பேர் கிளம்பி வந்துட்டாங்க. அந்த சங்கடத்தை தவிர்க்கத்தான். 'அலுவலகத்திலே இல்லே... வெளியே போயிருக்காரு சார்'ன்னு சொல்லச் சொன்னேன். நீ என் நண்பன்னு நல்லாத் தெரியும். அதனாலதான் பொய்

சொல்லாம என்கிட்டே கேட்டுட்டு, உள்ளே அனுப்பி யிருக்கா.''

அப்போது தொலைபேசி அலறியது.

''அலோ... சொல்லுங்க வந்தனா!''

''சார்.. பத்திரிகை நிருபர் ஒருவர் வந்திருக்கிறார். அவசியம் உங்களைப் பார்க்கணும்னு சொல்கிறார்.''

''எதற்காக?''

''பேட்டி வேணுமாம்!''

''போனை அவர்கிட்டே கொடுங்க!''

கொடுத்தாள்.

''அலோ..''

''வணக்கம் சார்.. சுனாமியால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை தத்து எடுத்து இருக்கீங்க. அதற்காக மனப்பூர்வமான பாராட்டுகள். உங்க பேட்டி வேணும்!''

''தயவுசெய்து மன்னிக்கணும். இந்த விசயத்தைப் பெரிதுப்படுத்தி விளம்பரப்படுத்துறதை நான் விரும்பலே.''

''இதிலே என்ன சார் இருக்கு? நீங்க பண்ணின நல்லகாரியத்தை பலர் படிச்சா.. அதுலே, உதவுகிற மனப்பான்மை உள்ள சிலபேரை தூண்டி விட முடியுமில்லையா?''

''சரிதான் சார்! ஆனா, நான் செய்த உதவியை பிரபலப் படுத்திக்க மனசு கூசுது.''

''எதற்கும் கொஞ்சம் யோசியுங்க. நாளை மறுபடி பேசுறேன்!''

''நன்றி!''

ரிசீவரை வைத்தான்.



அவனையே பார்த்துக்கொண்டிருந்த விஷ்ணு ஆச்சரியப்பட்டான்.

''ஏன்டா சந்துரு. இப்படி இருக்கே?''

''எப்படி இருக்கேன்?''

''பத்திரிகையிலே பேட்டிதானே கேட்கிறாங்க? தரலாமே!''

''ப்ச்... தம்பட்டம் அடிச்சுக்கிறதுக்கா?''

''நீ ஏன் அப்படி நினைக்கணும்? உன்னைப் பார்த்தாவது சில பணக்காரங்க நாமும் உதவணும்னு நினைப்பாங்க இல்லையா?''

''இதையேதான் அந்த நிருபரும் சொன்னார். ஏனோ, நான் விரும்பலே. விட்டுருப்பா.. வேறு எதையாவது பேசுவோம். என்னாச்சு உன் கல்யாண வேலை?''

பேச்சை திசை மாற்றினான், சந்துரு.

காரை ஓட்டியபடி சென்னை மாநகரத்தின் அழகை ரசித்துக் கொண்டிருந்தான், சந்துரு.

மணப்பெண் ஊர்வலம்.. வரிசையாய் நகர்ந்து கொண்டிருந்தன, கார்கள்.

திரையில் நடிகைகள் அணியும் உடைகளைப் பார்த்து தாங்களும் அதே மாதிரி அணிந்துகொள்ளும் காலம் போய், இப்போதெல்லாம் கல்லூரி கன்னிகள் அணியும் கவர்ச்சி உடைகளை காப்பியடித்துக் கொண்டிருக்கின்றனர், நடிகைகள். அந்த அளவிற்கு அண்ணா சாலையில் அரைகுறை உடையில் நடமாடிக்கொண்டிருந்தனர், நங்கைகள்.

'அம்மா எனக்காக தீவிரமாய் பெண் பார்த்துக் கொண்டிருக்கிறாள். இந்த மாதிரி பெண்கள் கூட்டத்திலிருந்

தேர்வு செய்துவிடாமல் காப்பாற்றப்பா! பெண் என்றால், அவளைப் போல் அல்லவா இருக்க வேண்டும்?'

தொலைக்காட்சியில் பார்த்த பெண்ணின் முகம் நினைவுக்கு வந்தது.

அப்போது செல்போன் அழைத்தது.

எடுத்துப் பேசினான்.

"அலோ.."

"அலோ.. மிஸ்டர் சந்துருவா?" என்றது இனிய பெண் குரல்.

"ஆமாம்.. சந்துருதான் பேசுறேன். நீங்க?"

"வணக்கம் சார். என் பேர் சம்யுக்தா. நிலா டி.வி.யி லேருந்து பேசுறேன்."

"சொல்லுங்க மேடம்? என்ன விசயம்?"

"ஐம்பது குழந்தைகளை நீங்க தத்து எடுத்திருக்கீங்க. எங்க டி.வி. சார்பாக வாழ்த்துக்கள்."

"நன்றி மேடம்!"

"உங்க பேட்டி வேணும். உங்க வசதிப்படி நேரம் ஒதுக்கி கொடுத்தீங்கன்னா.. நேரில் வர்றோம் சார்!"

"மன்னிக்கணும் மேடம். இது சம்பந்தமாக பேட்டி தருவதில் எனக்கு உடன்பாடில்லை."

"ஏன் சார்.. கேமரா பயமா? உங்களைப் போன்ற தொழிலதிபர்கள் இதற்கெல்லாம் பயப்படலாமா?"

"தவறாகப் புரிந்துகொண்டு விட்டீர்கள், மேடம்! எனக்கு இந்த பேட்டியில் விருப்பமில்லை. அவ்வளவு தான். ப்ளீஸ்!"



மறுமுனையில்...

ஆச்சரியப்பட்டாள், சம்யுக்தா.

'இதை ஆணவம் என்று எடுத்துக் கொள்வதா? அடக்கம் என்றெண்ணுவதா? ஊகூம்.. விடக்கூடாது. நேரில் வருகிறேன், மிஸ்டர் சந்துரு. இது பணக்கார மமதை என்றால் கண்டிப்பாய் பதிலடி கொடுப்பேன்!' சம்யுக் தாவின் இளநெஞ்சம் தீர்மானித்துக்கொண்டது.

"சார்.. சம்யுக்தாங்கிற பெண் நிலா டி.வி.யிலேருந்து வந்திருக்காங்க!"

முக்கியமான கோப்பில் ஆழ்ந்திருந்த சந்துருவுக்கு அடக்க முடியாத ஆத்திரம் எழுந்தது.

"என்னங்க வந்தனா? எத்தனை முறை சொல்வேன்? இதையெல்லாம் நீங்களே பேசி அனுப்பிவிட வேண்டாமா?"

"எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன், சார்!"

"சரி.. உள்ளே அனுப்புங்க. நான் பேசிக்கிறேன்!" என்றபடி கோப்பை மூடி வைத்தான்.

மரியாதை நிமித்தம் கதவைத் தட்டி, அவனது அனு மதிக்குரல் கேட்டபின் உள்ளே நுழைந்தாள், சம்யுக்தா. அவளைப் பார்த்து செயலற்றுப் போனான், சந்துரு.

'இவளா சம்யுக்தா? நான் டி.வி.யில் பார்த்து அசந்து போன அதே பெண்ணல்லவா?'

"வணக்கம் சார்!" கை கூப்பிய சம்யுக்தாவுக்கும் வியப்பு

'இவனை எங்கோ பார்த்திருக்கிறோமே?'

தாமரை மொட்டு போல் குவிந்த கரங்களும், அழகா கத்தரிக்கப்பட்டு - வண்ணமிடப்பட்டிருந்த நகங்களு கூட ஓவியம் போல் இருந்தன.

''வணக்கம்.. உட்காருங்க!'' அதுவரை கொதித்துக் கொண்டிருந்த இதயம் இப்போது சமனப்பட்டிருந்தது.

''என் பெயர் சம்யுக்தா..''

''தெரியும். நேற்று கூடப் பேசினீங்களே! ஒன்றை மட்டும் உறுதியாகக் கூறிவிடுகிறேன். தயவுசெய்து அதைப் பற்றி மட்டும் பேச வேண்டாமே!'' என்றான், கெஞ்சலாய்.

சம்யுக்தா வியப்பு மேலிட அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.




வீட்டுக்குள் நுழைந்த சந்துருவை முகம்கொள்ளா சிரிப்புடன் வரவேற்றாள், லெட்சுமியம்மாள்.

''வாப்பா.. முதல்ல உனக்கு சுத்திப் போடணும்!''

''ஏம்மா?''

''வந்துப் பாரு.. உனக்கு ஏகப்பட்ட வாழ்த்துத் தந்திகளும், பூங்கொத்துகளும் அனுப்பியிருக்காங்க. போனில் வேறு பாராட்டுறாங்க. சந்தோசமா இருக்குடா. ரொம்ப பெருமைப்படுறேன். உங்க அப்பா கூட ஆனந்தத்துல கண் கலங்கிட்டார்'' எனும்போதே லெட்சுமியம்மாளும் கலங்கிவிட்டார்.

''உணர்ச்சிவசப்படாதேம்மா! சூடா காபி தா! குடிச்சிட்டு போய் அப்பாகிட்டே கொஞ்சம் ஆலோசிக்கணும்.''



சற்று நேரத்தில், காபியுடன் மகன் எதிரே நின்றாள்.

''அம்மா.. உனக்கொரு விசயம் சொல்ல மறந்துட்டேனே!''

''என்னப்பா?''

''அந்த சம்யுக்தா என் அலுவலகத்திற்கு வந்திருந்தா!''

''சம்யுக்தாவா? யாருப்பா அது?''

''அதாம்மா.. டி.வி.யில் செய்தி வாசித்தாளே... நீ கூட அவளை எங்கோ பார்த்திருப்பதாக சொன்னியே?''

''ஓ.. அவளா? அவ எதுக்கு அங்கே வந்தா?''

சந்துரு விளக்கிச் சொன்னான்.

''ஏன் சந்துரு.. பேட்டி கொடுத்திருக்கலாமே?''

''வேண்டாம்மா.. இதே மாதிரி பலரும் அறிவுரை சொல்லி அலுத்துப்போச்சு. நான் அப்பாவைப் பார்த்துட்டு வந்துடுறேன்.''

தந்தையின் அறை நோக்கி அவன் நடக்கையில், மறுபடி அவளது நினைவு வந்தது.

'அவளை இதற்குமுன் எங்கோ பார்த்திருக்கிறேன். எங்கே... எப்போது?' கேள்வி எழுந்து, மண்டையைக் குடைந்தது.

மொட்டை மாடியில்.. சம்யுக்தாவிடம் காற்று சீண்டி விளையாடியது.

கடற்கரையையொட்டிய பங்களா!

வெண்ணிற மணற்பரப்பும், நீலக்கடலும் பார்க்கப் பார்க்க அலுக்காது, சம்யுக்தாவுக்கு.

சமீபகாலமாய் - பொங்கி, புரண்டு வரும் அலைகளைப் பார்க்கும்போது அவை, ஆபத்தை உள்ளடக்கி இருக்கின்றனவோ என நோட்டமிடத் தோன்றுகிறது.

ஆனால், இப்போது அதையெல்லாம் மீறி அவன் முகம்தான் நினைவுக்கு வருகிறது.

'எவ்வளவு தெளிவு? அடக்கம்?'

'அவனை இதற்குமுன் எங்கோ பார்த்திருக்கிறேன். எங்கே?'

"என்னம்மா... இங்கே வந்து காற்று வாங்குகிறாயா?" என்றபடி மகளின் தோளில் கை வைத்தார், சந்தானமூர்த்தி.

"நான் எங்கே வாங்குகிறேன்? அதுவாக வருகிறது!"

அவளது நையாண்டிக்கு சிரித்தார்.

"வேலை எப்படிம்மா போய்க்கிட்டிருக்கு?"

"மனசுக்கு பிடிச்ச வேலையாச்சேப்பா... நிறைவா திருப்தியா போய்க்கிட்டிருக்கு."

"காலையிலே நீ கிளம்பினதும் ரெண்டு போன் வந்தும்மா. ஒண்ணு டி.வி. தொடர் வாய்ப்பு. இன்னொன்று சினிமா வாய்ப்பு. இரண்டாம் கதாநாயகியாக நடிக்க முடியுமான்னு கேட்டாங்க!"

"என்ன பதில் சொன்னீங்கப்பா?"

"வேறென்ன சொல்லுவேன்? என் பொண்ணுக்கு இதிலெல்லாம் விருப்பமில்லேன்னுதான்!"

"நன்றிப்பா.. என் மனசை நல்லாப் புரிஞ்சு வச்சிருக்கீங்க."

"நான் உனக்கு எல்லா விசயத்திலும் முழு சுதந்திரம் கொடுத்திருக்கிறேன்ம்மா. ஆனா, அதிலேயும் நீ



கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக்கிட்டு, கண்ணியமா நடந்துக்கிறே. ஆனா, உன் அளவுக்கு கார்த்திக் புத்திசாலியா இல்லையேன்னு வருத்தமா இருக்கும்மா!"

"கார்த்திக் சின்னவன். விளையாட்டுத்தனம் மிச்சமிருக்கு. அது மறைஞ்சதும் எதிர்காலத்தைப் பற்றி யோசிக்க ஆரம்பிச்சிடுவான். தனக்குள் ஒளிஞ்சி இருக்கிற திறமையை அவனே தேடுவான். அந்த மாற்றங்களை உடனே நாம எதிர்பார்க்கிறது தப்புப்பா!"

"நீ சொன்னா சரிதாம்மா! இப்பதான் எனக்கும் கொஞ்சம் நிம்மதியா இருக்கு. அப்புறம் இன்னொரு முக்கியமான காரியம்."

"சொல்லுங்கப்பா!"

"விஜயனை உனக்குத் தெரியுமில்லையா?"

"உங்க நண்பர் மகாலிங்கத்தோட மகன்தானே?"

"அவனேதாம்மா! லண்டனில் படிச்சிட்டு, இங்கே தொழில் தொடங்கி சக்கைப்போடு போட்டுக்கிட்டிருக்கான். ஏக சொத்து. உன்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசைப்பட்டு முறைப்படி கேட்டான். நீ என்னம்மா சொல்றே?"

சம்யுக்தா இதை எதிர்பார்க்கவில்லை. அதிர்ச்சியில் அவளது கண்கள் விரிந்தன.

"இ.. இப்ப வேணாம்ப்பா.. கொஞ்ச நாள் போகட்டுமே!"

"பரவாயில்லேம்மா.. நீ எப்ப சொல்றியோ.. அப்ப பண்ணிட்டால் போச்சு. விஜயனும் காத்திருப்பான். உனக்கு அவனைப் பிடிச்சிருக்கா? அதுக்கான பதில் மட்டும் தெரிந்தால் போதும்."

'என்னவென்று சொல்வது? விஜயனை இரண்டு, மூன்று முறை பார்த்திருக்கிறேன். அப்போதே அவனது அலட்டல் கண்டு முகம் சுளித்ததையா? இவனுக்கு மனைவியாய் வாய்ப்பவள் பாவம் என்று முகம் தெரியாத பொண்ணுக்காகப் பரிதாபப்பட்டதையா? எதைச் சொல்லுவேன்?'

''அப்பா...''

''சொல்லுடா!''

''விஜயன் நல்லவர்தான்.. மறுக்கலை. ஆனால், அவரை வாழ்க்கைத் துணைவராக நினைக்க என் மனம் மறுக்கிறது. இன்னும் காலம் இருக்கிறதுப்பா.. அதற்குள் உங்களுக்கேற்ற மருமகனை கண்டுபிடித்துவிடலாம்.. கவலைப்படாதீர்கள்!'' தந்தையின் தோளில் மெல்லத் தட்டி ஆறுதல் படுத்தினாள்.

சந்தானமூர்த்தி மனம்விட்டுச் சிரித்தார்.

''நீயே கண்டுபிடித்துக் கொடுத்தாலும் எனக்கு ஆட்சேபணை இல்லை!''

''அந்தக் கதையே வேண்டாம். ஒழுங்காய், லட்சணமாய், பெண்ணைப் பெற்றவராய் அலைந்து, திரிந்து மாப்பிள்ளை தேடுகிற வழியைப் பாருங்கள்!''

''அட!'' என்று அசந்துபோனார், சந்தானமூர்த்தி.

தயாராகி மாடிப்படிகளில் தடதடத்து இறங்கிக் கொண்டிருந்த மகனை ஆச்சரியமாய்ப் பார்த்தாள், லெட்சுமி.

''என்ன சந்துரு.. இன்னைக்கு இவ்வளவு சீக்கிரமா கிளம்பிட்டே? நான் இன்னும் பூஜையைக் கூட ஆரம்பிக்கலே!''



''ஆஸ்திரேலியாவிலிருந்து முக்கிய வியாபாரப் புள்ளி வருதும்மா. வரவேற்று, ஓட்டலில் தங்கவச்சிட்டு வரணும். இன்னைக்கு உன் கையால் சாப்பிடுற பாக்கியமில்லே... வரட்டுமா?''

''பார்த்துப் போய் வா!''

சந்துருவின் கார் அடுத்த ஒரு நிமிடத்தில் உறுமிப் புறப்பட்டது.

''செல்வி.. செல்வி..''

''இதோ வந்துட்டேங்கம்மா!'' வேலைக்காரப் பெண் மணி பவ்யமாய் அவள் முன் வந்து நின்றாள்.

''வீட்டைத் துடைச்சது யாரு?''

''நான்தான்ம்மா!''

''பாரு தூசியை? அப்படியே இருக்கு. ஏனோதானோன்னு வேலை செய்கிறதா இருந்தா செய்யாதே.. நானே துடைச்சுக்கிறேன்!''

''மன்னிச்சுக்குங்கம்மா. மறுபடி துடைச்சிடுறேன்!''

''ம்.. ஆகட்டும். பூக்காரி வந்துட்டாளா?''

''வந்துட்டாம்மா. பூவை மேசை மேலேதான் வச்சிருக்கிறேன்!''

''சரி.. சரி. வேலையைக் கவனி!''

லெட்சுமி கைக்கொள்ளா பெரிய பூப்பந்தை எடுத்துக் கொண்டு பூஜையறைக்குச் சென்றாள்.

பக்தி பாடல் ஒலிநாடாவை எடுத்துச் செருகியவள் அப்போதுதான் அதன் உறையைப் பார்த்தாள்.

சம்யுக்தா அழகாய் சிரித்துக் கொண்டிருந்தாள்.

'அட.. இந்தப் பெண்தானே டி.வி.யில் செய்தி வாசிக்கிறாள்? அதனால்தான் எங்கோ பார்த்தது போல் இருந்திருக்கிறது? சந்துரு வந்தால் சொல்ல வேண்டும்.'

அடுத்து வந்த நிமிடங்கள், வேலைகளை சுமந்து கொண்டு கரைந்தன.

பூஜையை முடித்துவிட்டு, கணவருக்கு சாப்பிட பரிமாறிவிட்டு கோவிலுக்குக் கிளம்பினாள், லெட்சுமி.

அவள் பின்னால் வெள்ளி அர்ச்சனைக் கூடையுடன் பின்தொடர்ந்து வந்தாள், செல்வி.

“செல்வி.. நீ வீட்டிலேயே இரு. நான் மட்டும் போயிட்டு வந்திடுறேன். ஐயா அறையில் ஜன்னலை கொஞ்சம் துடைச்சிடு. திரைச்சீலையை மாத்திடு!”

“சரிங்கம்மா!”

லெட்சுமி வெளியே செல்வதாக இருந்தால் துணைக்கு செல்வியும் செல்வாள்.

இன்று, அம்மா கோபமாக இருக்கிறாள் என்று அவளுக்குப் புரிந்தது.

கோவிலில் கூட்டமிருந்தது. தரிசனம் முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தாள்.

ஆள் அரவமற்ற சாலையில் கார் பயணித்துக் கொண்டிருக்க... லெட்சுமியம்மாளின் கவனத்தை அந்தக் காட்சி ஈர்த்தது.

ஒரு இளம்பெண்.. சாலையோர மரத்தடியில் வாகனத்தை நிறுத்திவிட்டு, சரிபார்த்துக் கொண்டிருந்தாள்.

“வேலு.. காரை நிறுத்து!”

“சரிங்கம்மா!”



அருகில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள், சம்யுக்தா. ஆச்சரியப்பட்டாள்.

“என்னம்மா ஆச்சு?”

வலிய வந்து விசாரித்த பெரியவளை மரியாதையுடன் ஏறிட்டாள்.

“தெரியலேம்மா.. திடீர்னு நின்னுப்போச்சு!”

“நீ சம்யுக்தாதானே?”

“ஆமாம்!”

“உன்னை டி.வி.யில் பார்த்திருக்கிறேன். நீ பாடின ‘கேசட்’டைதான் வீட்டில் கேட்கிறேன். சரசுவதி கடாட்சம் உனக்கு நிறையவே இருக்கு!”

“நன்றிம்மா!” என்றாள், இளையவள்.

## 9



“அவசர வேலையாக போய்க்கிட்டிருக்கியா என்ன? வண்டி பழுதுன்னா, வாயேன். என் காரிலேயே போயிடலாம்.”

“இல்லம்மா.. வீட்டுக்குத்தான் கிளம்பிட்டிருக்கேன்.”

“வீடு எங்கே?”

சொன்னாள்.

“என் வீட்டைக் கடந்துதான் போகணும். காரில் வந்துடேன்!”

"உங்களுக்கு ஏன்ம்மா வீண் சிரமம்? பரவாயில்லை.. நான் பார்த்துக்கிறேன்."

"எனக்கு என்னம்மா சிரமம்? நானா உன்னை சுமக்கப் போகிறேன்? கார்தானே சுமக்கும். உன்னைப் பார்த்ததே சந்தோசமா இருக்கு. உன் டி.வி. நிகழ்ச்சிகளை விரும்பிப் பார்க்கிறவ நான். நீ என் வீட்டுக்கு வந்தா சந்தோசப் படுவேன்!"

"ச.. சரிங்கம்மா.. வர்றேன்!" என்றாள், சங்கடத்துடன்.

தன் வண்டியைப் பூட்டி ஓரமாய் விட முயற்சித்தாள்.

"எதுக்கு சம்யுக்தா? வண்டியை எவனாவது தள்ளிக்கிட்டுப் போயிடுவான். இப்படிப் பண்ணினா என்ன? நீ கார் ஓட்டுவியா?"

"ம்.. ஓட்டுவேன்!"

"நல்லதாப்போச்சு. வேலு, நீ என்னப் பண்ணுறே.. சம்யுக்தா வண்டியைச் சரிபார்த்து வீட்டுக்கு எடுத்துட்டு வந்துடு. சம்யுக்தா.. நீ கார் ஓட்டும்மா!"

"இந்தக் காரையா?"

"ஏம்மா.. தப்பா எடுத்துக்கிட்டியா?"

"சேச்சே.. இது, விலை உயர்ந்த வெளிநாட்டுக் கார். என்னை நம்பி ஓட்டச் சொல்றீங்களேன்னுதான்..."

"நீ எதிலும் பேர் வாங்குகிற பொண்ணுன்னு பார்த்தாலே புரியுதே! பயப்படாம ஓட்டு.. வா!"

உற்சாகமானாள், சம்யுக்தா.

அழகிய அரேபிய குதிரை மாதிரியிருந்த காரில் ஏறி அமர்ந்தாள். அவளுக்கு பக்கத்திலேயே லெட்சுமியம்மாள் உட்கார்ந்து வழிகாட்ட.. சிரமமின்றி லாவகமாய் ஓட்டினாள்.



சொன்ன இடத்தில் காரை நிறுத்தியவள், வியந்து போனாள்.

அந்தம்மாள் வீடு இத்தனை பிரமாண்டமாய், மாளிகையாக இருக்கும் என்று அவள் சற்றும் எண்ணவில்லை.

'எவ்வளவு எளிமையாய்ப் பழகுகிறார், இந்தம்மா?'

"வாம்மா.. உள்ளே வா!" மகிழ்ச்சியுடன் வரவேற்றாள், மூத்தவள்.

வீட்டின் உள் அலங்காரம் மனதைக் கவர்ந்தது.

முதலில் கணவருக்கு அறிமுகப்படுத்தினாள். மறுபடி வரவேற்பறைக்கு அழைத்து வந்து, அமர வைத்தாள்.

"வீட்டை சுத்திக் காட்டுறேன். அதுக்கு முன்னாடி இனிப்பு சாப்பிடு."

"வேண்டாம்மா."

"நீ என்ன சொன்னாலும் விடப்போறதில்லே. முதன் முதலாக சாட்சாத் சரசுவதியே எங்க வீட்டுக்கு வந்திருக்கிற மாதிரி இருக்கு. கண்டிப்பா இனிப்பு சாப்பிட்டே ஆகணும்!" அன்பும், அழுத்தமுமாக அவள் கட்டளையிட, சம்யுக்தாவால் மறுக்க முடியவில்லை.

"இரும்மா.. இதோ எடுத்துட்டு வர்றேன்" என்று உள்ளே போய்விட்டாள், லெட்சுமியம்மாள்.

சோபாவில் அமர்ந்தபடி அறையை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தாள், சம்யுக்தா.

அப்போது காரை நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்தான், சந்துரு.

அங்கே சம்யுக்தாவைப் பார்த்தவன், செய்வதறியாது திகைத்து நின்றான்.

'இவளெங்கே இங்கே?'

அரவம் கேட்டு அவளும் திரும்ப... கண்களில் - முகத்தில் வியப்பு.

'இவன் எதுக்கு இங்கே?'

"வாங்க மிஸ் சம்யுக்தா. நான் உங்களை இங்கேயும் எதிர்பார்க்கலே!"

"என்ன சொல்றதுன்னே தெரியலே. நீங்க..."

"திணறாதீங்க.. புரியுது! நான்தான் பேட்டி தரமாட்டேன்னு சொல்லிட்டேனே. பிறகும் ஏன் வீடு தேடிவந்து தொந்தரவு தர்றீங்க? படிச்சவங்கதானே நீங்க? புரிஞ்சுக்க மாட்டீங்களா?" ஏனோ சற்று ஆவேசமாகவே வந்தன, வார்த்தைகள்.

சங்கடமாகிவிட்டது, சம்யுக்தாவிற்கு.

அவனைப் பார்த்த வியப்பிலிருந்து அவள் மீள முடியாமல் இருக்க... தன் வருகையை வேறுவிதமாக நினைத்து அவன் கோபப்பட.. தொட்டாச்சிணுங்கியாய் துவண்டுப்போனது மனசு.

தன் பணியில் இதுபோன்ற இக்கட்டுகள் வரும்தான். அப்போதெல்லாம் துவளாத உள்ளம் இவன் பேசியதால் மட்டும் ஏன் வாடிப்போனது?

இனிப்பு வகையறாக்களுடன் வந்த லெட்சுமியம்மாள், மகனின் வருகையைக் கண்டு திகைத்து நிற்க... உடனே சமாளித்துக் கொண்டாள்.

"சந்துரு.. இவங்க சம்யுக்தா.. நம்ம விருந்தாளி."

"விருந்தாளியா.. என்னம்மா சொல்றே?"

"ஆமாம்ப்பா" என்றபடி, நடந்த விசயங்களைக் கூறினாள்.



சந்துரு சங்கடமும், வெட்கமுமாய் சம்யுக்தாவைப் பார்த்தான்.

"சாரி.. எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலே... மன்னிச்சிடுங்க!" என்றான்.

"ப.. பரவாயில்லீங்க!"

"சம்யுக்தா.. இவன்தான் என் மகன் சந்துரு. ஆமா, நீங்க ரெண்டு பேரும் ஏற்கனவே அறிமுகமானவங்கதானே?"

"ஆமாங்கம்மா!" என்றாள், புன்னகைத்தபடி.

"முதல்ல சாப்பிடும்மா. சந்துரு நீயும் சாப்பிடு. அப்புறம்.. சந்துரு உன்கிட்டே ஒண்ணு சொல்ல மறந்துட்டேனே! சம்யுக்தாவை டி.வி.யிலே பார்த்துட்டு 'இந்தப் பொண்ணை எங்கேயோ பார்த்திருக்கேன்'னு புலம்பிட்டிருந்தேனே.. இப்ப அந்தப் புலம்பலுக்கு பதில் கிடைச்சிடுச்சு. இதோ.. இந்த கேசட்டுலதான் பார்த்திருக்கிறேன்!" என அந்த ஒலிநாடாவை மகனிடம் நீட்டினாள், அம்மா.

வாங்கிப் பார்த்த சந்துருவின் முகத்தில் வியப்பு பரவியது.

"ஓ.. நீங்கள் பாடவும் செய்வீர்களா?"

"ம்" என்றாள், அடக்கமாக.

"இந்தப் பாட்டை நானும் கேட்டிருக்கிறேன். அம்மாவிடம் கூடப் பாராட்டினேன். ரொம்ப அருமையான குரல் உங்களுக்கு!"

"நன்றி!"

"சம்யுக்தாவை முதல்ல சாப்பிட விடு, சந்துரு. அப்புறம் பேசலாம்" அம்மா செல்லமாய் கடிந்துகொண்டாள்.

"மறுபடி சாரி, மிஸ் சம்யுக்தா!" என்றான், வாய்விட்டுச் சிரித்து.

"தப்பா எடுத்துக்காதீங்கம்மா.. நான் அதிகமா இனிப்புகள் சாப்பிடுவதில்லை. கொஞ்சம் சாப்பிட்டதே அதிகம். போதுமே" கெஞ்சலாய் புருவம் உயர்த்தி, பரிதாபமாய் முகத்தை வைத்து, அவள் செய்த பாவனை, ஏதுமறியா சிறுமியைப் போன்று தோன்றியது.

தன்னை மறந்து அவளையே பார்த்தான், சந்துரு.

"சரி... சரி. உன்னைக் கஷ்டப்படுத்த விரும்பலே" என்று சிரித்த லெட்சுமியம்மாள், "சம்யுக்தாவுக்கு வீட்டை சுத்திக்காட்டு சந்துரு" என்றாள், மகனிடம்.

"வாங்க சம்யுக்தா!"

மறுக்காமல் சென்றாள்.

இருவரும் இணையாக மாடியேறிச் செல்வதை வெகுவாய் ரசித்தாள், லெட்சுமியம்மாள்.

'என் மகனுக்கு பொருத்தமான மகாலட்சுமி இவள்தான்!'

சந்துரு ஒவ்வொரு அறையையும் காட்டினான்.

இப்படியொரு மாளிகையை அவள் இதற்கு முன் பார்த்ததில்லை. பிரமிப்பின் உச்சத்தில் இருந்தாள், சம்யுக்தா.

கடைசியாய் தன் அறைக்கு அழைத்துச் சென்றான்.

"இது அடியேன் வாசம் செய்யும் குடில்" என்றான்.

விசாலமாய்.. நான்கு பக்கமும் ஜன்னலுடன், வெளிச்சமாய், காற்றின் தாளத்திற்கேற்ப ஆடிக்கொண்டிருந்த திரைச் சீலைகள் கூட கவித்துவமாய்...

சம்யுக்தா அச்சூழலை வெகுவாய் ரசித்தாள்.

'நல்ல ரசனையுள்ளவன் போலும். அறையெங்கும் அழகிய சிலைகளும், குட்டிக் குட்டி போன்சாய் மரங்களும், ஓவியங்களுமாய் சொக்க வைக்கிறதே!'



இடது மூலையில் பித்தளைத் தொட்டியில் வளர்ந்திருந்த குட்டை மாமரத்தின் காய்கள் காய்த்துத் தொங்கின.

ஆசையுடன் அதனருகில் அமர்ந்தாள். வாஞ்சையுடன் தடவிக் கொடுத்தாள்.

"மனிதனின் கண்டுபிடிப்புகளில் ஆச்சரியப்படுத்தும் விசயமல்லவா, இது?"

"ஆமாம், சம்யுக்தா. இயற்கையைக் கூட தன்வசப் படுத்திய மனித ஆற்றல், அபாரமானதுதான். மறுப்பதற்கில்லை. அதேநேரம் வருத்தமாகவும் இருக்கிறது. அழகிற்காக, நாகரீகத்திற்காக இதன் வளர்ச்சியை ஒரு கட்டுக்குள் வைத்திருப்பது நியாயம் தானா? குள்ளமாய்ப் பிறப்பவர்களின் வருத்தம்தானே இதற்கும் ஏற்படும்? ஏனோ, இந்த மரத்தை பார்க்கும்போதெல்லாம் என்னுள் இந்தக் கேள்வி எழாமலில்லை."

அவன் கூற்று... அவன் மீதிருந்த மரியாதையை இன்னும் அதிகப்படுத்தியது.

"நீங்கள் சொல்வது சரிதான்!" என்று ஆமோதித்தவளின் கண்கள், ஓரிடத்தில் ஆச்சரியத்துடன் நிலைபெற்றது.

அங்கு.. அவள் வரைந்த ஓவியம் கம்பீரமாய் காட்சியளித்தது.

"உங்களுக்கு ஓவியத்தில் ஈடுபாடு உண்டா மிஸ்ட சந்துரு?"

"என்ன.. அப்படி கேட்டுட்டீங்க?" என்ற சந்துருவுக் சட்டென நினைவுக்கு வந்தது.

'இவளை.. நான் ஓவியக்காட்சியில் அல்லவா ப திருக்கிறேன்?'

சம்யுக்தாவிற்கும் அதே நிலைதான்.

“இந்த ஓவியத்தை வரைந்தது யார் தெரியுமா?”

“தெரியும்... ஆனால், பார்த்ததில்லை!”

“இல்லை... பார்த்திருக்கிறீர்கள்.”

## 10



“பார்த்ததில்லையே தவிர, தொலைபேசியில் பேசியிருக்கிறேன். குடும்பப் பொறுப்பை சுமந்துள்ள பெண்மணி அவர்கள். குடும்பத்திற்காக செலவழிப்பது போக மீதி நேரத்தில்தான் ஓவியம் வரைவதாக சொன்னார்கள். இந்த ஓவியத்தில் என்ன நேர்த்தி, கலையழகு? இயற்கையைக் கண் முன் நிறுத்தி வைத்த அந்தப் பெண்மணியை என் வாழ்க்கையில் ஒருமுறையாவது சந்திக்க நினைக்கிறேன்” என்றான், உணர்ச்சிவசப்பட்டவனாக.

‘ஓ.. அன்று எனக்கு போன் பண்ணினது இவன்தானா? சரியான ஜொள்ளன் என்று தவறாகக் கணித்து, பொய் சொல்லிவிட்டேனே!’ மனம் குமைந்தவள், முகமெங்கும் பரவிய பூரிப்புடன் அவன் முன்னே போய் நின்றாள்.

“நீங்கள் ஓவியத்தின் கலாரசிகர் என்று நினைக்கும் போது உள்ளம் பூரித்துப்போகிறது. இந்த ஓவியத்தை வரைந்த பெண்மணியை உடனே, இந்த நிமிடமே உங்களை சந்திக்க



“நிஜமாகவா... அதெப்படி?”

“இப்படித்தான்!” என்று ஓவியத்தின் அருகே சென்றவள், அதில் இடப்பட்டிருந்த கையொப்பத்தின் கீழே மீண்டும் கையொப்பமிட்டாள்.

அதைப் பார்த்த சந்துரு துல்லியமாய் அதிர்ந்து போனான்.

அதே கையெழுத்து!

“அப்படியானால்.. அப்படியானால் அந்த சம்யுக்தாவும், நீங்களும்...”

“ஒன்றே!” என்றாள் பவ்வியமாக - கைகளை கட்டிக் கொண்டு.

“பிறகு ஏன் மணமானப் பெண்மணியென்று...”

சம்யுக்தா அவன் மனம் புண்படாதபடி காரணத்தைச் சொன்னாள்.

“வீணாகக் கூட்டம் சேர்ப்பது எனக்குப் பிடிக்காது. அதனால் பொதுவாக இப்படியொரு பொய்யைச் சொல்லி விடுவது வழக்கம். தவறாக எண்ணிவிடாதீர்கள்.”

“சேச்சே.. நியாயமான காரணம்தானே? உண்மையி லேயே உங்களைச் சந்தித்ததில் மிகவும் மகிழ்கிறேன் சம்யுக்தா. இன்னும் வேறென்ன திறமைகளையெல்லா ஒளித்து வைத்திருக்கிறீர்கள்?”

“ஊகூம்.. வெறெதுவுமில்லை!”

“பலவித திறமைகளால், எல்லோராலும் அறியப்ப இளம்பெண் சாதனையாளரான மிஸ் சம்யுக்தா தோழியாக வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். எ கொள்வீர்களா?”

"இப்படியொரு கேள்வியை நீங்கள் முன்வைப்பதில் எனக்கு உடன்பாடில்லை. மாறாக, உங்கள் நட்பு கிடைத்ததற்காக நானல்லவா பெருமைப்பட வேண்டும்?"

"நான் என்னை சாதாரணமானவனாகத்தான் நினைக்கிறேன். ஆனால், சம்யுக்தாவின் தோழன் என்பதில் மனம் கர்வப்படுகிறது. இன்றிலிருந்து நாம் நல்ல நண்பர்கள். சரிதானே?" என்றபடி கையை நீட்டினான்.

"ம்!" தலையசைத்து சிரித்தபடி அக்கையைப் பற்றி குலுக்கினாள்,சம்யுக்தா.

மெத்தென்ற பஞ்சைத் தொட்டது போல் உணர்ந்தான். அந்த உணர்வினூடே கண்ணுக்குப் புலப்படாத, இதுதான் என்று சொல்ல முடியாத, பெயர் தெரியாத ஏதோ ஒன்றும் அவனுள் ஊடுருவியது.

சம்யுக்தாவும் சிலிர்த்த தன் தேகத்தில் அந்தப் புரியாத புதிரை உணர்ந்தாள்.

"ஆனால், ஒரே ஒரு வேண்டுகோள், சம்யுக்தா!"

"சொல்லுங்கள்!"

"நண்பனாகிவிட்டானே என்ற உரிமையில் என்னிடம் மறுபடி பேட்டி கேட்கமாட்டீர்களே?"

"இல்லையில்லை!" தாங்கமாட்டாமல் வாய்விட்டு சிரித்துவிட்டாள், சம்யுக்தா. கூடவே, சந்துருவும்.

அறையைத் தாண்டி, படியிறங்கி வந்து வீட்டை நிறைத்த சிரிப்பொலி கேட்டு மனம் குளிர்ந்துபோனாள், லெட்சுமி அம்மாள்.

எப்போதும் தொழில், தொழில் என்று தொழிற்சாலைக்கும், அலுவலகத்திற்கும் பறந்துகொண்டிருந்த சந்துருவிடம் ஒரு மாற்றத்தை உணர்ந்தாள், பெற்றவள்.



நேரத்திற்கு வீடு திரும்பினான். அலுவலகத்திலிருந்து எந்தத் தொலைபேசி அழைப்பும் வராதபடி பார்த்துக் கொண்டான். நிறைய புத்தகங்கள் படித்தான். சம்யுக்தாவின் டி.வி. நிகழ்ச்சிகளைப் பார்த்தான். நிகழ்ச்சி முடிந்ததும் அவளுக்கே போன் பண்ணுவான்.

சம்யுக்தா, நிகழ்ச்சி முடிந்ததும் எப்போது வீட்டுக்குப் போவோம், அம்மா கையால் சாப்பிடுவோம் என்று பரபரப்பவள். இப்போதெல்லாம் வீட்டு நினைவு வருவதில்லை. கையிலிருக்கும் செல்போன் சிணுங்காதா? சந்துருவிடமிருந்து அழைப்பு வராதா? என்று தவித்தாள்.

அவள், ஓரளவு நாகரீக உடை அணிவாள். மற்றபடி டி.வி. நிகழ்ச்சிகளில் சேலையும், பூவுமாகத்தான் காட்சியளிப்பாள். சம்யுக்தாவிடம் உள்ள இந்த விசயமும் சந்துருவை வெகுவாய் கவர்ந்திழுத்தது. அவள் மீதான மரியாதையைக் கூட்டிற்று. இருவரும் தங்களை அறியாமலேயே அனுமதியின்றியே ஒருவர் மனசுக்குள் ஒருவர் உலா வந்தனர்.

மறுநாள் சந்துருவின் பிறந்த நாள். அது அவளுக்குத் தெரியாது என நினைத்தான், சந்துரு.

அவன் சிறுவனாய் இருந்தவரை மகனின் பிறந்த நாள் விழாவைப் பெற்றவர்கள் அமர்க்களப்படுத்துவார்கள்.

ஆனால், சந்துரு வாலிப நிலையை அடைந்தபின் வலுக்கட்டாயமாக டாம்பீக கொண்டாட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தான்.

அவன் பிறந்த நாளை கொண்டாடும் விதமே மாறிப்போயிற்று. தன் ஊழியர்களுக்கு அறுசுவை உணவு போட்டான். பெற்றவர்கள் காலில் விழுந்து வணங்குவான். அவ்வளவுதான்!

சந்துரு படுக்கச் சென்றான்.

லெட்சுமியம்மாள் உள்ளே வந்தாள்.

''சந்துரு..''

''நாளைக்கு உன் பிறந்த நாள்!''

''நினைவிருக்கும்மா.''

''நாளை அம்மனுக்கு விசேஷமான நாள். நான் ஒரு காரியத்தை மனசுக்குள் வேண்டி இருக்கிறேன். அது சுபமாய் முடியணும். உன் பெயரில் பால் முழுக்கு செய்ய ஏற்பாடு பண்ணி இருக்கேன். நீ எங்களோடு திருவொற்றியூர் வடிவுடை அம்மன் கோவிலுக்கு வரணும்!''

''அம்மா.. மன்னிக்கணும். என்னை விட்ருங்க. ஆபீசில் முக்கியமான வேலை இருக்கு.''

''அதுக்கில்லே சந்துரு..''

''இல்லேம்மா.. என்னைத் தப்பா புரிஞ்சுக்காதீங்க. நான் ஒண்ணும் தெய்வ நம்பிக்கை இல்லாதவனில்லே. இருக்கு. ஆனா, அதுலேயும் ஒரு அளவு வச்சிருக்கேன். எந்தத் தெய்வமும் தனக்கு அது வேணும், இது வேணும்னு கேக்கிறதில்லே. கேட்டா, அது தெய்வமும் இல்லே. எல்லாமே மனுசங்க சுயநலத்துக்காக உருவாக்கினது. தெய்வம்ங்கிறது அவங்கவங்க மனசுக்குள்ளே இருக்கிற மனசாட்சிதாம்மா!

கோவிலுக்கு போறது தப்பில்லே. ஆனா, கூட்டத்தோடு கூட்டமா எம்பி எம்பிப் பார்த்து கன்னத்துல போட்டுக்கிறதுல என்ன பக்தி இருக்கு? நான் கோவிலுக்குப் போனால் 'என்னை நம்பி பல தொழிலாளர்கள் இருக்காங்க. அவங்களை இதைவிட சந்தோசமா வச்சுக்கணும். அதுக்கு என்ன செய்யணும்னு நினைக்கிறியோ அதைச்



செய்!' என வேண்டுவேன். முடிஞ்சது என் பிரார்த்தனை. இதை, சொல்றதுக்கு தெய்வத்துக்கும், எனக்கும் ஓய்வு இருக்கணும். அதனால நாளைக்கு என்னை வரச்சொல்லி கட்டாயப்படுத்தாதே!''

லெட்சுமியம்மாள் தலையைப் பிடித்துக் கொண்டாள்.

''என் தலை சுத்துது சந்துரு.. உன்னைப் பற்றி தெரிஞ்சும் கேட்டிருக்கக்கூடாது'' என்றபடி அம்மா வெளியேற...

சிரித்துக்கொண்டான், சந்துரு.

இரவு உடைக்கு மாறி, படுக்கையில் விழுந்தான். பல நினைவுகளுனூடே உறக்கம் தழுவிக் கொண்டது.

இரண்டு மணி நேரம் கடந்திருக்கும்.

நள்ளிரவில் அவனது செல்போன் சிணுங்கியது. திடுக்கிட்டு எழுந்து, எடுத்தான், சந்துரு.

## 11



அழைப்பு எண்ணைப் பார்த்தவனுக்கு இன்ப அதிர்ச்சி!

சம்யுக்தா தான்!

'இந்த நேரத்திலா? அவளுக்கு ஏதும்?' மனம் பதறிற்று.

''அலோ.. சொல்லுங்க!''

''மனப்பூர்வமான என் இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள். மகிழ்ச்சியாய் நூறாண்டு வாழ வாழ்த்துகிறேன்!''

சந்துருவுக்கு இன்னும் அதிர்ச்சி!

'என் பிறந்த நாள் இவளுக்கு எப்படித் தெரியும்? நான் சொல்லவில்லையே?'

"நன்றி சம்யுக்தா! ஆனால், உங்களுக்கு எப்படி என் பிறந்த நாள் தெரியும்?"

"நமக்கு முக்கியமானவர் என்று ஒருவரை கருதத் தொடங்கிவிட்டாலே அவரைப் பற்றிய பிடித்த, பிடிக்காத விசயங்களை தெரிந்துகொள்ள சில நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம் அல்லவா? அதுபோல்தான் இதுவும்! உதாரணமாக, என் பிறந்த நாளை அறிந்து கொள்ள நீங்கள் சிரத்தை எடுத்துக் கொண்டீர்களே.. அது போல!"

"அய்யோ!" வெட்கமாகிவிட்டது, சந்துருவுக்கு.

'எல்லாவற்றையும் தெரிந்து வைத்திருக்கிறாளே... அழகிய ராட்சசி!'

"சரி.. பிறந்த நாள் விருந்தெல்லாம் கிடையாதா? என்னை அழைக்கவே இல்லையே?"

"நான் விழாவாகக் கொண்டாடி சில ஆண்டுகள் ஆகி விட்டது. ஆனால், உங்களுக்காக நாளை கொண்டாடப் போகிறேன்!" என்றான்.

"உண்மையாகவா?"

"சம்யுக்தா என்ற அழகிய பெண் மீது சத்தியமாக!"

"சரி.. நாளைப் பார்ப்போம்!"

அதன்பின் சந்துருவிடம் உறக்கம் நெருங்கவே இல்லை. இன்ப உணர்வுகளுடன் புரண்டு கொண்டிருந்தான். விடிவதற்காகக் காத்திருந்தான்.



விடிந்தபோது.. மற்றுமொரு அதிர்ச்சி எட்டியது.

யாரோ ஒருவர், வேனில் இருபது வகை போன்சாய் மரங்களை கொண்டுவந்து இறக்கினார்.

"ஏது இது? நான் 'ஆர்டர்' கொடுக்கவில்லையே. முகவரி மாறி வந்துவிட்டீர்களா?"

"நீங்கள்தானே சந்துரு சார்?"

"ஆமாம்!"

"இதை சம்யுக்தா மேடம் ஆர்டர் கொடுத்திருக்காங்க. சார்... இதிலே ஒரு கையெழுத்துப் போடுங்க" என்றபடி ஒரு காகிதத்தை நீட்டினார். கூடவே சிறு உறை.

அதில்...

*"அன்பான என் சந்துருவுக்கு!*

*பிறந்தநாள் பரிசு! இவை உங்கள் மனதுக்குப் பிடிக்கும் என்று நம்புகிறேன்!*

*நேசமுடன்,*
*சம்யுக்தா."*

முத்து முத்தான கையெழுத்து!

பரவசமாகிப்போனான், சந்துரு.

மா, பலா, கொய்யா, சப்போட்டா, ஆரஞ்சு உட்பட பழ மரங்கள் மட்டுமின்றி, ஆலமரம், கொன்றை, முருங்கை, அசோகா மரங்களும் குட்டை குட்டையாக!

அவைகளையே இமைக்கொட்டாமல் ரசித்துக் கொண்டு இருந்தான்.

லெட்சுமியம்மாளுக்கும் ஏகப்பட்ட, குஷி. அவளுக் சம்யுக்தாவை ரொம்பவே பிடித்துப் போய்விட்ட

'இவளை இந்த வீட்டு மருமகளாக்கிக்கொள்ள வேண்டும்' என்ற ஆசை வேர்விட தொடங்கியது.

'இவள் என் மகனுக்கு ஏற்றவள். சரசுவதி கடாட்சம் நிரம்பியவள்.'

'ஆமாம்.. நான் ஆசைப்பட்டால் மட்டும் ஆச்சா? இருவர் மனதிலும் என்ன இருக்கிறதோ?'

அந்த சந்தேகம் இப்போது லேசாக விலகியது.

சம்யுக்தா பிறந்த நாள் பரிசு அனுப்பியது.. அதை ஆசையுடன் மகன் பார்த்துக் கொண்டிருப்பது...

"அம்மா... வடிவுடையம்மா.. இருவரையும் தம்பதிகளாக இணைத்து வையம்மா!" என்று கோரிக்கை வைக்க, பெரிய பால் குடத்துடன் காரில் கோவிலுக்கு புறப்பட்டு விட்டாள், லெட்சுமி.

சந்துருவும் குளித்து முடித்து, சாப்பிட்டு அலுவலகம் கிளம்பத் தயாராய் இருந்த நேரத்தில்...

வந்தாள் அந்தத் தேவதை!

கையில் பூங்கொத்துடன்!!

அவன் எதிர்பார்க்கவில்லை! உள்ளமெல்லாம் உற்சாகம் கொப்புளிக்க வரவேற்றான், சந்துரு.

"வாங்க.. வாங்க சம்யுக்தா!" என்றவன் இமைக்காமல் அவளையே பார்த்தான்.

தும்பைப்பூ நிற சல்வாரில்... காதோரம் சிவப்பு ரோஜாவுடன் அப்போதுதான் குளத்திலிருந்து பறிக்கப்பட்ட தாமரையைப் போலிருந்தாள்.

'எவ்வளவு அழகு.. பேரழகு!'



"வாழ்த்துக்கள் மிஸ்டர் சந்துரு!"

அவள் கொடுத்த பூங்கொத்தை வாங்கிக் கொண்டவன், "இன்று முழுக்க உங்கள் வாழ்த்து மழையில்தான் நனைந்து கொண்டிருக்கிறேன். மறுபடியும் நன்றி, சம்யுக்தா!"

"முதல் வாழ்த்து என்னிடமிருந்துதான் வரவேண்டும் என்று ஆசைப்பட்டேன். நள்ளிரவில் போன் செய்து தொந்தரவு செய்துவிட்டேனா?" என்றாள், விழிகளைப் படபடவென மூடித்திறந்து.

"தொந்தரவா? எனக்கா? பெரிய வார்த்தை எதற்கு?"

"........."

"என்.. என்.. நெருங்கியத் தோழி அல்லவா நீங்கள்?"

'தோழி மட்டும்தானா சந்துரு?' ஏக்கம், பெருமூச்சா வெளிப்பட்டது.

"அப்புறம்.. மறுபடியும் நன்றி!"

"இது எதற்காம்?" என்றாள், குறும்பாக.

"அழகியப் போன்சாய் மரங்களை பரிசாகக் கொடு தற்கு!"

"உங்களுக்கு ரொம்பப் பிடிக்குமே.. அதற்காகத் அனுப்பினேன். மகிழ்ச்சிக்கு நன்றி!"

"ஓகோ.. எனக்கு என்னப் பிடித்தாலும் பரிசாக விடுவீர்களா?"

"தாராளமாக! கொடுப்பதற்கும், வாங்கிக் தற்கும் தகுதி இருக்கும்போது.. கொடுப்பதில் எந்தக் கஞ்சத்தனமும் இல்லை."

''அழகாகப் பேசுகிறீர்கள். அதில் எந்த ஆச்சரியமும் இல்லை.''

''ஏன்?''

''அழகானப் பெண்.. அழகாகப் பேசுவதில் என்ன ஆச்சரியம் இருக்கப் போகிறது?''

''ஏன், புத்திசாலிகள் அழகாகப் பேசமாட்டார்களா?''

''நான் உங்களிடம் பார்த்தது அழகைத்தானே?''

''பாரேன் கிண்டலை!'' செல்லமாய் உதடைக் குவித்து கோபித்துக் கொண்டாள்.

அவளுடனான நேரங்கள் மிகமிக ரம்மியமாய் நகர்வதை உணர்ந்தான், சந்துரு.

'பெண்ணே.. உன்னை எவ்வளவு நேசிக்கிறேன் தெரியுமா? ஆனால், அதை எப்படி வெளிப்படுத்துவது என்று புரியாமல் தவிக்கிறேன். அதை நீ தவறாகப் புரிந்துகொள்வாயோ என்கிற பயம்தான்!'

'யோவ்.. உன் மனதில் என்ன இருக்கிறது என்பது எனக்கும் தெரியும். என்னை கிறுகிறுக்க வைத்துக் கொண்டிருக்கிற அதே பாழாய்ப்போன காதல் உன்னையும் ஒரு வழிப் பண்ணிக்கொண்டிருக்கிறது என்பதையும் அறிவேன். தொழிலில் பெரிய புலியாம். தைரியம் எங்கே போயிற்றாம்? நானாக சொல்லுவேன் என்று காத்துக் கொண்டிருக்கிறீர்களாக்கும். அது மட்டும் நடக்காது. நீங்களாக வெளிப்படுத்தும் வரை என் காதலும் வாய் திறக்காது!'

இருவரின் விழிகளும் கதை பேசின.

''சாப்பிடுகிறீங்களா சம்யுக்தா?''



''சாயங்காலம் நீங்கள் தரப்போகும் விருந்தில் ஒரு கைப் பார்த்துவிடுகிறேன். இப்போது வேண்டாம். அலுவலகத்திற்கு நேரமாகி விட்டது. அம்மா எங்கே?''

''கோவிலுக்கு. சீக்கிரமே எனக்கொரு மனைவியைக் கொண்டு வர வேண்டும் என்பதற்காக, சாமியிடம் மல்லுக்கட்டிக் கொண்டிருப்பார்கள்.''

''ஏன்... உங்களுக்குப் பெண் தர நீ... நான் என்று போட்டிப் போட்டுக் கொண்டு வரிசையில் நிற்பார்களே?''

''பெரிய வரிசையில் ஏகப்பட்ட பெண்கள் போட்டி போட்டார்கள்தான். ஆனால், நான் தேடியப் பெண் அதில் இல்லையே!''

''பெரிய எதிர்பார்ப்பு வைத்திருக்கிறீர்களோ?''

''பெரிய எதிர்பார்ப்பு என்று சொல்ல மாட்டேன். பார்த்ததும், 'அட... இவள்தான் என்னவள்' என்று உள்ளுக்குள் சிறு தீப்பற்றிக் கொள்ளும் அளவில்... ஒரு நளினமான தேவதையைத் தேடினேன்!''

''இன்னுமா கிடைக்கவில்லை?''

''கிடைத்து விட்டாள். ஆனால், அவளுக்கும் என்னைப் பிடிக்க வேண்டும் அல்லவா?''

''வெளிப்படையாகப் பேசிவிட்டால் தெரிந்துவிடப் போகிறது.''

''தயக்கம் தடுக்கிறதே!''

''விரைவில் தைரியத்தை வரவழைத்துக் கேட்டு விடுங்கள். எனக்கு நேரமாகிறது... வரட்டுமா?''

''கவனமாகச் செல்லுங்கள். வண்டியை வேகமா ஓட்டாதீர்கள்'' என்றான், அக்கறையாக.

அந்தப் பேச்சை ரசித்தபடி வெளியேறினாள்.

அவள் சென்றதும் அவள் தந்த பூங்கொத்தை எடுத்து மார்புடன் அணைத்துக் கொண்டான். முகத்தோடு சேர்த்து முத்தமிட்டான்.

எதேச்சையாகத் திரும்பியவன், சம்யுக்தா நின்றிருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டான்.

''பூ... பூ... ரொம்ப மணமாக இருக்கு!'' என்றான், தடுமாறி.

''ஆமாம்... மணமாகத்தான் இருக்கு. வாசம் இங்கே வீசுகிறதே! செல்போனை மறந்து வைத்து விட்டேன்!'' என்றவள், எடுத்துக் கொண்டு பறந்தாள்... ஏகப்பட்ட பூரிப்புடன்.

'சே... பூங்கொத்துக்கு நான் முத்தமிட்டதைப் பார்த்திருப்பாளோ? இருக்காது... இருக்காது!'

தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டான், வெட்கத்துடன்!



## 12

நகரின் பிரபல ஓட்டல்!

மேல்தட்டு மக்கள் மட்டுமே அதனுள் காலடி வைக்க முடியும். எங்கு திரும்பினாலும் செழுமையான பணக்கார முகங்கள்.



சந்துருவும், சம்யுக்தாவும் எதிரெதிரே அமர்ந்திருந்தனர்.

விதவிதமான உணவு வகைகள், வழவழ மேசை மீது வைக்கப்பட - இருவரும் சாப்பிடத் தொடங்கினர்.

ஆனால், இருவருமே அதிகமாய் பேசிக் கொள்ளாமல்... விழிகளாலேயே விழுங்கிக் கொண்டிருந்தனர்.

இறுக்கமான ஜீன்சும், 'இன்' பண்ணிய சட்டையும், அடர்ந்த கேசமும், சவரம் செய்யப்பட்டு வழுவழுவென்றிருந்த கன்னமும், சதைப்பிடிப்பான - சிகரெட் தொடாத சிவந்த உதடுகளின் மேலே வசீகரமாய் அமர்ந்திருந்த கரிய மீசையும், குறுகுறு கண்களுமாய்... ஆண்களே பொறாமைப்படும் அழகனாய் இருந்த சந்துருவை, அவனறியாதபோது ஆசையோடு அளவெடுத்தாள், சம்யுக்தா!

அவன் நிலையும் அதேதான்!

இளம் ரோஜா நிற வெங்காயச் சருகு சேலையில் இருந்த அவளை, விரித்து விடப்பட்ட கூந்தல், தோகை மயிலாக்கியது. பவுடர் போடாத பளிங்கு முகத்தில், குவிந்த உதடுகள் தாமரை இதழ்களாய் மயக்கத்தைத் தந்தன.

'இப்போதாவது, 'உன்னை நேசிக்கிறேன் சம்யுக்தா!' என்று மனம் திறந்து சொல்லிவிடுங்களேன் சந்துரு' என்று அவளும்...

'சொல்லத்தான் நினைக்கிறேன். ஆனால், பயம் வந்து தடுக்கிறது, சம்யுக்தா. உன் எண்ணம் வேறு மாதிரியாய் இருந்து 'இவ்வளவுதானா நீங்கள்? உங்களை ரொம்ப உயர்வாக எண்ணியிருந்தேன்? கடைசியில் மற்றவர்

களைப் போல நல்ல நட்புக்கு காதல் முலாம் பூசிவிட்டீர்களே!' என்று கூறி விட்டால்... உடைந்து போய்விடுவேன். காதலியாக இல்லா விட்டாலும் உன் நட்பாவது எனக்கு இறுதி வரை வேண்டும் சம்யுக்தா!'

இதழ்கள் மவுனப் புரட்சி செய்ய - இரு இதயங்களும் பேசிப் பேசி ஏங்கின.

அரை குறையாய் சாப்பிட்டு எழுந்து சென்றனர்.

அன்று பாடல் ஒலிப்பதிவுக்காக அவசர அவசரமாக தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள், சம்யுக்தா. அறைக்குள் அம்மா மோகனா நுழைந்தாள்.

"சம்யுக்தா... உன்னைத் தேடி ஒருத்தர் வந்திருக்கார்!"

"யாரும்மா?"

"பத்திரிகை நிருபராம். பேரு ஜெயந்தன்னு சொன்னார். நீதான் வரச்சொன்னியாமே?"

"அடடா... சுத்தமா மறந்தே போயிட்டேனே! நீ போம்மா... காபி கொடு. நான் இப்ப வர்றேன்."

ஜெயந்தன் காபி குடித்து, கோப்பையை வைக்கவும், சம்யுக்தா தயாராகிக் கீழே வரவும், சரியாக இருந்தது.

இவளைப் பார்த்ததும் எழுந்து நின்று கரம் குவித்தான்.

"வணக்கம் மேடம்!"

"வணக்கம். உட்காருங்க!"

"பேட்டியைத் தொடங்கலாமா?"

"தயவு செய்து மன்னிக்கணும்!"

"..........."

"உங்களை வரச் சொன்னேன்தான்! ஆனால், திடீரென்று காலையில் பாடல் பதிவு இருக்கு. அதனால்..."



"பரவாயில்லை மேடம்... எந்த ஒலிப்பதிவு தியேட்டர் என்று சொன்னால் அங்கே வந்து விடுகிறேன். ஓய்வின்போது நான் பேட்டியை எடுத்துக் கொள்கிறேன்."

"உங்களை ரொம்ப சிரமப்படுத்துகிறேன்!"

"இதெல்லாம் சகஜம் மேடம்! எந்த ஒலிப்பதிவு தியேட்டர் என்பதை மட்டும் சொல்லுங்கள்!"

"பிரசாத் தியேட்டர்!"

"உள்ளே வரலாமா சார்?"

"வாங்க!" கோப்பில் மூழ்கியிருந்த சந்துரு, நிமிராமலேயே சொன்னான்.

"சார்... உட்காரலாமா?"

நிமிர்ந்த சந்துரு, பலமாகச் சிரித்து விட்டான்.

"விஷ்ணு!"

"பாவி... நீதானா? இதென்ன கேள்வி? உட்கார அனுமதி கேட்பதெல்லாம்!"

"சாருக்கு இப்போதெல்லாம் என் நினைவே வருவதில்லை பாரேன்... இப்போதுகூட என் குரலை அடையாளம் தெரியாமல்தானே..."

"வேலைப்பளு... தவறாக எடுத்துக் கொள்ளாதே! என் உயிர் நண்பன் நீ. உன்னை மறப்பேனா?"

"மறந்ததால்தானே பிறந்த நாள் விருந்துக்குக்கூட அழைக்கவில்லை!"

"நான்தான் விழாவே கொண்டாடுவதில்லையே?"

"இந்தத் தடவை கொண்டாடினாயே, இரகசியமாக!"

"அது... அதெப்படி உனக்கு?" ஆச்சரியமாகக் கேட்டான்.

"எனக்கு மட்டுமல்ல... எல்லோருக்கும் தெரியும்."

"அதான் எப்படி?"

"பத்திரிகையிலே 'கிசுகிசு' போட்டிருக்காங்க. பாடகி சம்யுக்தா, இளம் தொழிலதிபர் சந்துருவுடன் ஓட்டலில் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டாருன்னு!"

"அப்படியா? எனக்குத் தெரியாதே!"

"அதைவிடு... அது உண்மைதானே?"

"சம்யுக்தா எனக்கு நல்ல தோழி!"

"நான் ஒன்றும் உன் காதலி என்று சொல்லவில் லையே, நண்பா!" என்றான், கிண்டலாக.

"சரி... உன் திருமண வேலைகள் எப்படி இருக்கு?"

"அது நல்லாவே நடந்திட்டிருக்கு! அதை விட்டுத் தள்ளு! உன் தோழி சம்யுக்தா யாரையாவது காதலிக் கிறாளா என்ன?"

"இல்லையே... ஏன் கேட்கிறே?"

"இந்தப் பேட்டியிலே சொல்லியிருக்காளே!" என்றபடி பிரபல வார இதழ் ஒன்றை அவன் எதிரில் போட்டான்.

அட்டையில் பளிச்சென்று புன்னகைத்துக் கொண் டிருந்தாள், சம்யுக்தா.

படத்தை ரசித்தபடி பரபரவென்று புத்தகத்தைப் புரட்டிய அவன் விரல்களே காட்டிக் கொடுத்தன. மனதில் புதைத்து வைத்திருந்த காதலை.

வாய்விட்டுச் சிரித்தான், விஷ்ணு.

அவனை அலட்சியம் செய்த சந்துரு, அந்தப் பேட் டியைப் படிக்கத் தொடங்கினான்.



"இந்தச் சிறு வயதில் பல துறையில் ஈடுபட்டு வெற்றி பெற உங்களால் எப்படி முடிந்தது?"

"தூண்டுகோல்... அதாவது, தந்தை என்கிற அன்பான தூண்டுகோல். தவிர, இயல்பிலேயே எனக்கான ஆர்வ மும் ஒரு காரணம்."

"சினிமாவில் பாடுகிறீர்கள். நடிக்க அழைத்தால்..."

"மாட்டேன்! ஒரு நல்ல நிம்மதியான குடும்ப வாழ்க் கையைத்தான் விரும்புகிறேன். பெரும்பாலான நடிகை களின் வாழ்க்கை கோர்ட்டில்தான் முற்றுப் பெறுகின்றன. அது ஏன் என்று புரியவில்லை. அவர்கள் சார்ந்துள்ள நடிப்பு தொழிலும் ஒரு காரணமாக இருக்கலாம். எனக்கு சின்னத் திரையிலும், பெரியத் திரையிலும் நடிக்க அழைப்பு வந்தது. மறுத்து விட்டேன்."

"உங்கள் திருமணம் காதல் திருமணமா?"

"காதல் திருமணமாகவும் இருக்கலாம். அதுவும் பெற்றோர் சம்மதத்தோடு!"

"இவ்வளவு வெளிப்படையாக பேசுகிறீர்கள். அப்படி என்றால் நீங்கள் காதலிக்கிறீர்களா?"

"இல்லை என்று பொய் சொல்ல விரும்பவில்லை!"

"வாழ்த்துக்கள்! யார் அந்த அதிர்ஷ்டசாலி!"

"இப்போது சொல்லமாட்டேன். ஏனென்றால்... நாங் கள் இருவருமே காதலிக்கிறோம். ஆனால், வெளிப் படுத்திக் கொண்டதில்லை. அவராகச் சொல்லும் வரை நானும் சொல்ல மாட்டேன்!" என்று முடித்திருந்தாள்.

சந்துருவுக்குள் நயாகரா பொங்கி வழிந்தது.

"இப்ப என்ன சொல்றே?"

''என்ன சொல்லணும்?''

''யார் அந்தப் புண்ணியவான்?''

''தெரியாது!''

''கண்ணாமூச்சி ஆடாமல் தைரியமாகச் சொல்லுடா. மூடி மூடி மறைச்ச எத்தனையோ காதல் காணாமலே போயிருக்கு!'' என்றான், விஷ்ணு. எங்கோ பார்த்தபடி.

''நீ யாரைச் சொல்றே?''

''பொதுவாகச் சொன்னேன்... சொல்லக்கூடாதா?'' நண்பன் கேட்க -

சந்துருவின் எண்ணமெல்லாம் சம்யுக்தாவை நோக்கி ஓடியது.

லெட்சுமியம்மாள் முன் சம்யுக்தா அட்டைப்படம் தாங்கிய வார இதழ் வீற்றிருந்தது.

அவளின் முகம் கவலையைப் பூசியிருந்தது.

'என்னென்னவோ கற்பனைப் பண்ணி வைச்சிருந்தேனே... இந்த வீட்டு மருமகளாக வருவாள்னு ஆசைப்பட்டேனே... யாரையோ காதலிக்கிறாளாமே... பாவிப் பொண்ணு!' புலம்பி, புலம்பி சோகம் வளர்த்தாள்.

13



கார்த்திக் வழக்கம் போல கேட்டுக், கேட்டு வாங்கிச் சாப்பிட்டான். பெரிதாய் ஏப்பம் விட்டான்.



''இன்னும் ரெண்டு பூரி வச்சுக்க!'' என்றாள், மோகனா.

''அப்புறமா சாப்பிடுறேன்ம்மா!'' என்றவன், கை கழுவச் சென்று விட்டான்.

இதுவே அப்பா சந்தானமூர்த்தி இயல்பான நிலையில் இருந்திருந்தால் 'இப்படி ஒரு நாளைக்கு ஆறு வேளை சாப்பிட்டால், வாசல்படியை இடித்து இன்னும் பெரிதாகக் கட்ட வேண்டியதுதான்' என்று சொல்லி இருப்பார். ஆனால், அவரோ தீவிர யோசனையில் இருந்தார்.

இடையிடையே அமைதியாக சாப்பிட்டுக் கொண்டிருந்த சம்யுக்தாவை கேள்விகளோடு பார்த்தார்.

சம்யுக்தாவிற்கும் உதைப்பாகத்தான் இருந்தது.

அந்த நேரத்தில் ஏதோ ஒரு உந்துதலில் தைரியமாகப் பேட்டி கொடுத்து விட்டாளே தவிர, அதன் பின் பயந்து கொண்டு தான் இருந்தாள்.

'வீட்டிலும் படிப்பார்களே! என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? அளவுக்கு அதிகமாக சுதந்திரம் கொடுத்ததை என் இஷ்டப்படி பயன்படுத்துவதாக நினைப்பார்களோ? அப்பா என்னை நன்கு அறிந்தவர். மறுப்பு சொல்ல மாட்டார்தான். ஒரு வேளை...'

''தட்டைப் பார்த்துச் சாப்பிடு சம்யுக்தா. என்ன யோசனை?'' அப்பாவின் குரலில் கலைந்தாள்.

''ச... சரிப்பா!''

''அது யாரும்மா?''

''என்னப்பா?''

''யாரந்த பையன்?''

''எ... எந்தப் பையன்?'' மென்று விழுங்கினாள்.

"பேட்டியிலே சொல்லி இருந்தாயே?"

"........"

"பயப்படாமல் சொல்லும்மா! உன் மேல் எனக்கு நிறைய நம்பிக்கை இருக்கு. திறமையான பெண் நீ! சுயமாகவே உன்னை வளர்த்துக் கொண்டவள். கட்டுப் பாடுகளுடன் வாழ்பவள். அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்க மாட்டாய்.

தாம்பத்திய வாழ்க்கையின் முக்கிய அம்சமே விருப்ப மான இணையுடன் வாழ்வதுதான். உன் விருப்பத்திற்கு தடை போடும் குறுகிய எண்ணம் கொண்ட அம்மா - அப்பாவாக நாங்கள் இல்லை. அந்தப் பையன் யாராக இருந்தாலும், சாதி - மத பேதமின்றி ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். இப்ப சொல்லு... யாரந்தப் பிள்ளை?" என்றார் சநதானமூர்த்தி, இதமாக.

மோகனாவும் மகளை ஆவலுடன் பார்த்தாள்.

ஒரு பெரிய பாரம் நெஞ்சிலிருந்து அகன்றது போலி ருந்தது, சம்யுக்தாவுக்கு.

பெற்றவர்களை நன்றியுடன் ஏறிட்டாள்.

"என் மேல இவ்வளவு நம்பிக்கை வச்சிருக்கிறதுக்கு நன்றிப்பா. ஆனா, எனக்கு கொஞ்சம் அவகாசம் கொடுங் கப்பா... நானே சொல்கிறேன்!"

"நீ அவசரப்பட்டு இதைப்பற்றி பேட்டியிலே சொல்லி இருக்க வேண்டாமோன்னு தோணுது!"

"இல்லேப்பா... காரணமாகத்தான் சொன்னேன். தினமும் போனிலும், கடிதத்திலும், நேரிலும் பல ஆண் களின் தொந்தரவு. கொஞ்சம் பிரபலமாய் இருப்பதால்



இதையெல்லாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இனி, அவர்கள் தொந்தரவிலிருந்து விடுபடலாமே" என்றாள்.

அவள் கூறியவை மட்டுமே காரணமல்ல, சந்துரு வுக்கு தன் மனதைத் தெரியப்படுத்தவும்தான்!

சந்தானமூர்த்தி தன் மகளை ஒரு பார்வை பார்த்து விட்டு, "சரிம்மா... நீ எப்ப சொல்லணும்னு நினைக் கிறியோ அப்ப சொல்லு. நேரமாகுதே உனக்கு!"

"ஆமாம்ப்பா... கிளம்புறேன்ப்பா... வர்றேன்ம்மா!" துள்ளிக் குதித்து ஓடாத குறையாக மகிழ்ச்சிப் பொங்க புறப்பட்ட மகளையே பார்த்துக் கொண்டிருந்தனர், பெற்றவர்கள்.

தெளிவான தமிழ் உச்சரிப்புடன் செய்தியை வாசித்துக் கொண்டிருந்தாள், சம்யுக்தா! அவளைச் சுற்றி நவீன கேமராக்கள் பதிவு செய்து கொண்டிருந்தன. திரையில் ஓடிக் கொண்டிருந்த வார்த்தைகளை பார்த்து வாசிப்பது தெரியாமல், இயல்பாய் வாசித்தாள்.

செய்தியை வாசித்து முடித்துவிட்டு, வெளியே வந்த வள், சந்துருவைப் பார்த்தாள்.

'இவன் எப்போது வந்தான்?'

விரைந்து அவன் அருகில் சென்றவள், "வா... வாங்க" என்றாள், தடுமாற்றமாய்.

அவனோ, அவளையே குறுகுறுவென பார்த்தான்.

"பேட்டி படித்தேன்!"

"அப்படியா?"

"நல்லா இருந்துச்சு!"

"ம்..."

'இப்போது சொல்கிறேன்... நான் உன்னைக் காதலிக்கிறேன்' தொண்டை வரை வந்துவிட்ட வார்த்தைகள், ஆவலாய் காத்திருந்த அவளின் கெண்டை விழிகளைப் பார்த்த நொடியில் வழுக்கி உள்ளே இறங்கி விட்டன.

'சே... பாழாய்ப்போன தைரியம், முழுதாக வந்து தொலைக்க மாட்டேன்கிறதே!'

'சொல்லிவிடுங்களேன், சந்துரு. இன்னும் எத்தனை நாளைக்குத்தான் தவிக்க வைப்பீர்கள்?'

"நா... நான் கிளம்புறேன்... இந்தப் பக்கம் ஒரு வேலையாக வந்தேன். அப்படியே பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன். வர்றேன்" என்றான், முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைத்து.

"ம்..." என்றாள், அவளும் ஏமாற்றமாய்.

சென்று விட்டான்.

அடுத்த இரண்டு நிமிடத்தில் அவள் கையிலிருந்த செல்பேசியில் "பீப்" என்ற ஒலி கேட்டது.

தகவல் வந்திருந்தது.

படித்தவள் சிலிர்த்துப் போனாள். சந்துருதான் அனுப்பி இருந்தான்.

"சம்யுக்தா... ஐ லவ் யூ!" என்று ஆங்கிலத்தில் இருந்தது.

திரும்பத் திரும்ப படித்து, சுவாசம் முழுக்க மகிழ்ச்சியை நிரப்பிக் கொண்டவள், தமிழில் பதில் அனுப்பினாள்.

'இது போதாது... ஊருக்கே தெரியும்படி சத்தமாய் சொன்னால்தான் தொழிலதிபர் சந்துருவுக்கு அழகு. அந்த தைரியம்தான் எனக்குப் பிடிக்கும்' என்று.



அதைப் படித்த அடுத்த நிமிடமே மறுபடி தன்னைத் தேடி வருவான் என்று காத்திருந்தவளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

அவன் வரவில்லை. அன்று முழுக்க போனும் பண்ணவில்லை.

இவளுக்கு இரவு முழுக்க உறங்காமலே கழிந்தது.

மறுநாள் -

அலுவலகத்திற்கு சென்றவள் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டாள்.

அலுவலகத்துக்கு நேர் எதிரே பெரிய பேனர் -

'சம்யுக்தா... நான் உன்னை நேசிக்கிறேன் -

அன்புடன்...

சந்துரு.'

கொட்டை எழுத்துக்கள் கண்ணில் அறைந்தன. ஆனந்தத்திலும் ஆதங்கத்திலும் கண்ணீர் வெளிப்பட்டது.

அலுவலகத்தில் நுழைந்தவளை ஆளாளுக்குக் கிண்டலும், கேலியுமாய் வறுத்தெடுத்தனர்.

'எப்போது நிகழ்ச்சி முடியும்?' என்று காத்திருந்தவள், முடிந்ததும் வண்டியில் ஏறிப் பறந்தாள்.

நேரே அவன் அறைக்குள் நுழைந்தாள்.

உதவியாளரிடம் பேசிக் கொண்டிருந்த சந்துரு அவளை எதிர்பார்க்கவில்லை.

உடனே உதவியாளரை அனுப்பி விட்டான்.

"உட்காருங்க சம்யுக்தா!"

"ஊஹூம்!" என்றாள், அவனையே விறைப்பாகப் பார்த்து.

"என்ன இது... ஏன் இவ்வளவு கோபம்? உட்கார மாட்டீர்களா?"

"மாட்டேன்!"

"அதான் ஏன்?"

"உட்காரு சம்யுக்தான்னு ஒருமையிலே சொன்னால் தான்!"

காதல் பொங்க அவளைப் பார்த்தபடி அருகில் வந்தவன், மெல்லக் கைப்பற்றினான் - முதன் முதலாக.

சிலிர்த்தாள், சம்யுக்தா.

"என் தைரியம் பிடிச்சிருக்கா?"

"ரொம்ப" என்றவள், இன்னும் நெருங்கி வந்தாள்.

"நான் தேடிக்கிட்டிருந்த புதையலே நீதான்... தெரியுமா?"

"நிஜமாவா?"

"உனக்காகத்தான் இத்தனை காலமும் காத்திருந்தேன்!"

அவளின் சந்திர முகத்தை இரு கைகளால் ஏந்திக் கொண்டான்.

"என்னை அவ்வளவு பிடிக்குமா?"

"என்னைவிட அதிகமாய்..."

"நான் அதிருஷ்டசாலி..."

"ஊகூம்... நான்தான் அதிர்ஷ்டசாலி. இந்த அழகுப் பெட்டகம் இனி எனக்கு மட்டுமே சொந்தம். என் கனவு தேவதையே எனக்கு மனைவியாகப் போகிறாள். இனி ஒவ்வொரு விடியலும் இந்த அழகு முகத்தில்தான்!" உணர்ச்சிப் பொங்கப் பேசியவனை, விழியகலாது பார்த்தவள் - தாங்க முடியாத ஆனந்தத்தோடு அவனது தோளில் சாய்ந்தாள்.



அவனோ, அவளை அணைத்து தலையை வருடிக் கொடுத்தான்.

அன்பு நெஞ்சங்கள் இரண்டும் இரண்டறக் கலந்தன.



இருவருக்கும் விமரிசையாக திருமணம் நடந்தது. ஏகப்பட்ட பேர் கலந்து கொண்டு வாழ்த்தினர். ஜோடிப் பொருத்தம் கண்டு எல்லோருமே ஆச்சரியப்பட்டனர்.

தன் மகளுக்கு கிடைத்த அருமையான வாழ்க்கையை எண்ணி இன்னும் பிரமிப்பிலிருந்து அகலாமல் இருந்தனர், சந்தானமூர்த்தியும், மோகனாவும்.

கலைமகளாய் ஒரு மருமகள் வாய்த்ததில் வரதனுக்கும் பரம திருப்தி. லெட்சுமியம்மாளுக்கு சொல்லவே வேண்டாம். தன் மனதுக்குப் பிடித்தவளே வீட்டுக்கு விளக்கேற்ற வந்ததில் ஏகப்பட்ட மகிழ்ச்சி.

தன் தோழிகளிடம் மருமகன் பெருமையை போற்றிப் பாடவே அவளுக்கு பொழுது சரியாக இருந்தது. வெள்ளிக் கிழமைகளில் பூஜையறையில் மருமகளைப் பாடச் சொல்லி, கண் மூடிப் பரவசப்படுவாள்.

வீடே பூரிப்பில் நிறைந்திருந்தது.

சம்யுக்தாவும் யாருக்கும் எந்தக் குறையும் வைக்கவில்லை. அதிகாலையில் எழுந்து, உடற்பயிற்சி செய்து, குளித்து முடித்து காபி போடுவாள். சமையல் உட்பட

மற்ற வேலைகளுக்கு நிறைய வேலையாட்கள் இருந்த தால், அவளுக்கு அதிக பளுவில்லை. தன் கையாலேயே கணவருக்கும், மாமனார் - மாமியாருக்கும் காபி கொடுப்பாள். உணவு பரிமாறுவாள்.

சந்துரு, மனைவிக்கு முழு சுதந்திரம் கொடுத்திருந் தான். முன்னிலும் உற்சாகமாக கலைத்துறையில் அவள் ஈடுபட்டாள். ஓவியக் காட்சி நடத்தினாள். கணவனை முழு ஓவியமாக வரைந்து, படுக்கையறையில் மாட்டி வைத்தாள்.

எவ்வளவு வேலையாக இருந்தாலும் இரண்டு நாளுக்கு ஒரு முறையாவது நேரம் ஒதுக்கி, ஜோடியாக வெளியே சென்று வந்தனர். எங்கு சென்றாலும் மனைவிக்குக் கிடைக்கும் வரவேற்பு கண்டு பெருமைப் பட்டான். அவளுடன் கைகோர்த்து நடப்பதையே கவுரவமாக நினைத்தான். பெண்களே வியக்கும் பேரழகி தன் மனைவி என எண்ணி எண்ணி பூரித்தான்.

தேனிலவுக்குப் புறப்பட்டனர்.

இன்பம்... இன்பம்... இன்பம் மட்டுமே ரசித்து களைத் தனர்.

கணவன் - மனைவியருக்குள் இது போன்ற தனிமை ரொம்பவே சுகம்.

இருவரைத் தவிர வேறெந்த உறவும் இல்லாத தனிமை - ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ள, பரஸ்பரம் நெருங்க தேனிலவு அவசியம்தான்.

இருவரும் ஊர் திரும்பும்போது இன்னும் அன்யோன்னிய மாக இருந்தனர்!



இரவு உணவை முடித்துவிட்டு, இரவு உடைக்கு மாறி கட்டிலில் விழுந்தான், சந்துரு.

சம்யுக்தாவுக்கு இரவிலும் ஒரு குளியல் போட்டால் தான் உறக்கம் வரும்.

வேறு ஆடையுடன் சென்றவள், குளித்த மலராக குளியலறையிலிருந்து வெளிப்பட்டாள். சரியாய் துடைக் கப்படாத மேனியில், நீர்த்திவலைகள் ஆங்காங்கே ஒட்டிக் கொண்டிருந்தன. பனித்துளிகளை சுமந்து கொண் டிருந்த ரோஜாப்பூவை நினைவுபடுத்தியது அவளது தேகம்.

சிவந்த நிறம், அழகு முகம், அற்புதமான வளைவு நெளிவுகள் என செதுக்கிய சிலை போல இருந்தாள்.

அருகில் வந்த மனைவியை ஏக்கத்துடன் பார்த்தான், சந்துரு. கைப்பற்றி இழுத்தான்.

தொப்பென மலர் மாலையாய் அவன் நெஞ்சத்தில் விழுந்தாள்.

சந்தன சோப்பின் நறுமணம், சில்லென்றிருந்த பனிக் கட்டி தேகம் சூடேற்றின.

அவளது செவ்விதழை வலிக்காமல் கடித்தான்.

மெல்ல அவனை விலக்கிய சம்யுக்தா, அவனது கேசத்தைக் கோதி விட்டாள்.

“ஆரம்பிச்சிடாதே கண்ணா... நான் அதிகாலையில் எழுந்தாக வேண்டும். ஒலிப்பதிவுக்குப் போகணும்.”

“அப்ப இன்னைக்கு பட்டினியா?”

“நல்லதுதானே? தினமும் மூக்கு முட்ட சாப்பிட்டால் சரி வருமா?” செல்லமாய் கொஞ்சினாள்.

"இந்த வயதில்தானே நன்றாகச் சாப்பிட முடியும்? அப்புறம்தான் பத்திய சாப்பாடு!"

"என் கண்ணான கண்ணனுக்கு எப்பவும் இதே நினைப்புதான். ஒரு சின்ன கண்ணன் வந்து விட்டால் இந்த உலகமே மறந்துபோகாதா?" வலிக்காமல், மீசையைப் பிடித்து இழுத்தாள்.

அவன் கற்பனை எங்கோ ஓடியது. அடுத்த கணம் சந்துருவின் முகம் மாறியது.

"வேண்டாம்... குழந்தை வேண்டாம்!"

"என்னது?" அதிர்ச்சியுடன் எழுந்து அமர்ந்தாள், சம்யுக்தா.

"என்ன சொன்னீங்க சந்துரு... குழந்தை வேண்டாம் என்றா?"

"ஆமாம்!"

"ஏன் சந்துரு?"

"நாம தத்து எடுத்துக்கலாம்."

"அதான் ஏன்?"

"நீ பாடுபட்டு கட்டிக் காப்பற்றிய உன் அழகு காணாமல் போயிடுமே!"

"......"

விக்கித்துப் போனாள், சம்யுக்தா.

ஒருபுறம் வியப்பாக இருந்தாலும்... வருத்தமே மேலோங்கி நின்றது.

'நிரந்தரமில்லாத இந்த அழகுதான் இவருக்கு முக்கியமா?'



"என்ன... அப்படிப் பார்க்கிறே?"

"இல்லீங்க... பெண்ணாகப் பிறக்கிற ஒவ்வொருவரும் தாய்மையில்தான் முழுமை அடையுறாங்க. அந்தத் தாய்மை முன் மத்த எல்லாமே தூசிதாங்க. எனக்கும் குழந்தைன்னா உயிர். நீங்க சொல்கிற மாதிரி எத்தனை குழந்தைகளை வேண்டுமானாலும் தத்தெடுத்து வளர்த்துக்கலாம். ஆனா, வயித்திலே சுமந்து, வலியெடுத்துப் பெத்துக்கணும். உங்க சாயலில் ஒரு பெண் குழந்தை, என் சாயலில் ஒரு ஆண் குழந்தை! இப்படி ஏகப்பட்ட கற்பனைப் பண்ணி வச்சிருக்கேன். தயவு செய்து இந்த மாதிரி இனி பேசாதீங்க. ப்ளீஸ்..."

"என் விருப்பத்தைச் சொன்னேன், அவ்வளவுதான். ஆனால், உனக்குள் இவ்வளவு கற்பனைகளும், கனவுகளும் இருக்கும்போது அதற்கு எந்தத் தடையும் விதிக்க மாட்டேன், சம்யுக்தா."

அவள் முகத்தை கையில் ஏந்தி, சில கணங்கள் அவளையே பார்த்தவன், அப்படியே தோள் மீது சாய்த்துக் கொண்டான்.

அந்த நிலை வெகு நேரம் நீடித்தது... கூடவே, மவுனமும்.

எப்போது உறங்கினார்களோ... அவர்களுக்கே தெரியாது.

அலாரம் ஓயாமல் அலறியது.

சட்டென கண் விழித்தான், சந்துரு. மணி அதிகாலை நான்கு. திரும்பிப் பார்த்தான்.

நன்றாக இழுத்துப் போர்த்தி உறங்கிக் கொண்டிருந்தாள், காதல் மனைவி. அலார சத்தம் அவளை அசைத்துப் பார்க்கவில்லை.

ஆறு மணிக்கு, டி.வி. நிலையத்துக்கு வரச் சொல்லி இருந்தார்கள்.

போர்வையை விலக்கி அவளின் அழகு முகத்தையே சிறிது நேரம் ரசித்தான். பிறகு உலுக்கி எழுப்பினான்.

"சமி... செல்லம்... எந்திரிடா!"

"........"

"ஏய்... நேரமாயிடுச்சு பாரு... எந்திரிம்மா!"

"மணி என்ன?" கண்ணை கசக்கிக் கொண்டே கேட்டவள், சிணுங்கினாள்.

"என்ன சந்துரு... மணி நாலுதானே ஆகுது! அஞ்சு மணிக்கு எந்திரிக்கிறேனே?"

"அதெல்லாம் இல்லை... உடற்பயிற்சி செய்ய வேண்டாமா?"

"உடம்பெல்லாம் அடிச்சுப் போட்ட மாதிரி வலியாக இருக்கு. இன்னைக்கு ஒரு நாள் இல்லேன்னா என்ன? ப்ளீஸ் சந்துரு... தூக்கம் வருது!"

"இந்த சோம்பேறித்தனம்தான் உடல் நலனுக்கு முதல் எதிரி. எந்திரி, ப்ளீஸ்..."

வேறு வழியின்றி எழுந்து, குளியலறை நோக்கிச் சென்றவளுக்கு சந்துரு மீது வருத்தமாக இருந்தது.

'என்ன இது? எல்லாவற்றையும் விட என் அழகை பராமரிப்பதில்தான் அதிக அக்கறை காட்டுகிறார். இது எதில் போய் முடியும்? நான் கடைசி வரை இதே இளமை யுடனா இருக்கப் போகிறேன்? அழகு போனால் என்னை வெறுத்து விடுவாரா என்ன?'

முதன் முதலாக அவளது அடிவயிற்றில் பயம் உற் பத்தியானது. கூடவே, வாந்தியும் வந்தது.



# 15



அந்த வீடு, உற்சாகத்தின் உச்சத்தில் இருந்தது. லெட்சுமி அம்மாள், ஊரிலுள்ள கோவில்களுக்கெல்லாம் சென்று பால் - தேன் முழுக்கு செய்தாள்.

சந்தானமூர்த்தியும், மோகனாவும் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர்.

சின்னக் குழந்தையின் வரவுக்காக எல்லோரும் ஆவ லாகக் காத்திருந்தனர்.

சம்யுக்தா வானத்தையே தொட்டுப் பார்த்துவிட்டு வந்த பரவசத்தில் இருந்தாள். அவ்வப்போது அடி வயிற்றை தொட்டுப் பார்த்துக் கொள்வாள்.

'என் செல்லம்... என் கண்ணு! நீ இப்போது எப்படி இருப்பாய்? மூக்கும், முளியுமாக உன் அப்பாவைப் போல் உருவாகிக் கொண்டிருக்கிறாயா? எந்த நாளில் உன்னை சந்திப்பேன்? எப்போது அம்மாவென்று அழைப்பாய்? காத்திருக்கிறேன் கண்ணே!' இரண்டு மாத கருவிடம் பேசுவாள்.

ஆனால், கணவனை காணும் போதெல்லாம் கலவரப் பட்டுப் போனாள்.

அவள் தாயானதில் அவனுக்கு கொள்ளை மகிழ்ச்சி தான். எந்த ஆண்தான் ஆனந்தப்பட மாட்டான்? ஒருவ னுக்கு அப்பா என்கிற பதவி உயர்வு, வாழையடி வாழை

யாக - வம்ச விருத்தியாக குழந்தை என்பது அவசிய மல்லவா?

தன் வித்து - இரத்தம், கருவாகி... உருவாகியதும் சம்யுக்தாவை கண்ணுக்குள் வைத்து இமையாகக் காத்தான். அவள் வாந்தி எடுக்கும்போதெல்லாம் சுத்தம் செய்தான். தண்ணீர் குடிக்கக் கொடுத்து, தன் கையா லேயே பழங்களைப் பிழிந்து சாறு தருவான். பக்கத்தி லேயே அமர்ந்து கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொள் வான்.

அவள் உறங்கியதும் தனியே அமர்ந்து யோசனையில் ஆழ்ந்து விடுவான்.

ஒரு நாளல்ல, இரண்டு நாளல்ல... தினமும் இதே நிலைதான்.

பதற்றமும், கவலையுமாய் நெற்றியைப் பிடித்துக் கொள்வான். அவனறியாமல் சம்யுக்தா பலமுறை இதை கண்ணுற்றாள். அவள் கவலை அதிகரித்தது.

'ஏன் இப்படி இருக்கிறார்? நான் கருவுற்றிருப்பதை மனதளவில் ஏற்றுக் கொள்ளவில்லையா?'

கேட்டுவிடத் துடித்தாள். ஆனால், ஏதோ ஒன்று தடுத்தது.

'குழந்தை பிறந்தால் அழகு குறைந்து விடும் என்கிற பயமா? மெத்தப் படித்தவர் இப்படி நினைப்பது நியாயமா?'

இவளுக்கு லேசாகத் தலைவலி, காய்ச்சல் என்றாலும் தனக்கே வந்தது போல் துடித்துப் போவதும், கன்னத்தில் சின்ன முகப்பரு வந்தாலும் ஆதங்கப்படுவதும் நாளடை வில் அவன் மீது அவளுக்கு சலிப்பையே தந்தது.

அன்று -



நீலாங்கரையில், ஓவியக் காட்சிக்கு ஏற்பாடு செய் திருந்தாள், சம்யுக்தா.

அவளை சங்கடமாய்ப் பார்த்தான்.

''இப்பதான் உனக்கு அடிக்கடி வாந்தி, தலை சுத்தல்னு வருதே. இந்த நேரத்தில் எம்மா அலையுறே? உடம்புக்கு ஆகாதே! அவ்வளவு தூரம் எப்படிப் போவே? டிரைவரும் இல்லே... இப்ப என்னாலும் வர முடியாத சூழ்நிலை...''

''உங்க நிலைமை எனக்குத் தெரியும்ங்க. நான் சமாளிச்சுக்கிறேன். இந்த ஓவியக் காட்சியிலே கிடைக்கிற பணத்தை பார்வையற்றோர் பள்ளிக்குத் தர்றதா சொல்லி இருக்கேன். நானே காரை ஓட்டுறேங்க!''

''நீயா... அதெல்லாம் கூடாது. ஒண்ணு பண்ணலாம். என் அலுவலகத்திலிருந்து யாரையாவது அனுப்புறேன்!''

''அங்கேருந்து இங்கே வந்து... நான் எப்ப கிளம்புறது? சிரமம் எதுக்கு? நான் நல்லாவே கார் ஓட்டுவேன்!''

''தெரியும்டா... ஆனா, நீ இப்ப களைப்பா இருக்கிறே. இந்த நேரத்தில் கார் ஓட்டுறது சரியாப் படலை, எனக்கு!''

''நான் சரியாகத்தான் இருக்கிறேன். வீணா குழம்பா தீங்க!''

சற்று யோசித்தவன், ''சரி... நான் உன்னை விட்டுட்டே அலுவலகம் போகிறேன்!''

''வேணாங்க... நீங்க முதல்ல புறப்படுங்க. நான் பார்த்துக்கிறேன்!''

''துணைக்கு அம்மாவை கூட்டிக்கிட்டுப் போயேன்.''

''அம்மாவுக்கு நேத்தெல்லாம் தலைவலி. அவங்களுக் குத்தான் முக்கியமா ஓய்வு தேவை!''

"சரி... எனக்கென்னவோ உன்னைத் தனியா அனுப்ப மனசுக்கு சங்கடமா இருக்கு. ஆட்டோகிராப் கேட்டு மேலே விழுந்து நெருக்கப் போறாங்க. கவனமாக இரு!".

"சரிங்க!" என்றாள், அவன் கவலையை ரசித்து.

தன் காரில் ஏறுமுன் சம்யுக்தாவையே சில நொடிகள் பார்த்தான். அவள் கன்னத்தில் இதழ் பதித்து, "ஜாக்கிரதை!" என்றான்.

"ம்..."

"வரட்டுமா?"

"சரிங்க!"

தன் காரில் ஏறி அமர்ந்து, மனமின்றி கிளம்பியவன் - திரும்பத் திரும்ப அவளைப் பார்த்தபடி சென்றான்.

கார் மறைந்ததும், அடுத்த காரில் ஏறினாள், சம்யுக்தா.

'இவரைப் புரிந்துகொள்ளவே முடியவில்லையே! இவர் அன்பை எதில் சேர்ப்பது?' என்றபடி கைக்கடிகாரத்தைப் பார்த்தவள் அதிர்ந்தாள்.

'அநியாயத்திற்கு தாமதமாகிவிட்டது. இந்நேரத்திற்கு பாதி தூரமாவது போயிருக்க வேண்டும்.'

'வேகமாக ஓட்டாதே டார்லிங்!' கணவனின் அறிவுரையை ஒரு ஓரமாக ஒதுக்கி வைக்க வேண்டியதாகி விட்டது.

எடுத்ததுமே வேகத்தை அதிகப்படுத்தினாள். வேங்கையாய் சீறிப் பாய்ந்தது, கார்.

மறுபடி கணவனின் நினைவுகள் அவளை ஆக்கிரமித்துக் கொண்டன.



'நான் குழந்தை பெற்றுக் கொள்ளுவதில் அவருக்கு முழு விருப்பம் இருக்காது? குழந்தையை நேசிப்பாரா, மாட்டாரா? என் அழகு குறைந்து போனால் அன்பும் குறைந்து போகுமா? ஏன் சந்துரு... ஏனிப்படி நடந்து கொள்கிறீர்கள்? பனிக்குமிழ் போன்று பட்டென்று காணாமல் போகும் அழகை ஏனிப்படி வெறித்தனமாக நேசிக்கிறீர்கள்?'

ஏதேதோ யோசித்தாள். அவளாகவே யூகித்தாள். தன்னிரக்கத்தில் கண்கள் கலங்கின. கண்ணீர், சாலையை மறைத்தது. கைக்குட்டையை எடுத்து கண்களைத் துடைத்த அந்த ஒரு நொடியில் தான்...

அது நிகழ்ந்தது!

வளைவிலிருந்து திரும்பிய லாரி ஒன்று திடீரென்று இவளது காரை நெருங்க...

சம்யுக்தா கடைசி நொடியில் பார்த்து, பதறி, அவசர அவசரமாய் வளைக்க...

அதற்கு அவகாசமின்றி லாரி மீது மோதி... மோதிய வேகத்தில் கார் குட்டிக்கரணம் அடித்து... உருண்டு உருண்டு... இடது பக்கமிருந்த பள்ளத்தில் போய் டமாரென விழுந்தது.

எல்லோரது இதயத்தையும் சக்கையாய்ப் பிழிந்த விபத்து நடந்து, இரண்டு மாதம் ஓடிவிட்டது.

அதிருஷ்டவசமாய் சம்யுக்தா உயிர் பிழைத்துக் கொண்டாள். நசுங்கிப்போன காரிலிருந்து அவளை இரத்தச் சகதியாய் சிரமப்பட்டுதான் தூக்கினார்கள்.

பத்து நாள் வரை ஆபத்தான கட்டத்தில் இருந்தவள், மற்றவர்கள் செய்த இரத்ததானத்தால் உயிர் பிழைத்தாள்.

இரண்டு மாதக் கரு கலைந்து விட்டது.

இரு வீட்டுப் பெரியவர்களுக்கும் அந்த விபத்து பெரிய அடியாகி விட்டது.

சம்யுக்தாவுக்கு முகத்தில்தான் கோர காயம். சில்லு சில்லாய் உடைந்த கார் கண்ணாடிகள் அவள் பளிங்கு முகத்தை தாறுமாறாய் குத்திக் கிழித்திருந்தன. காயம் ஆறியதும் அறுவை செய்து, வடுவை மறைக்க ஏற்பாடு செய்தான், சந்துரு.

கணவனின் அன்பில், சம்யுக்தா தன் குழந்தை இழப்பை சற்றே மறக்க ஆரம்பித்த அந்தத் தருணத்தில் தான்...

குளியலறை சென்றபோது எதேச்சையாக கண்ணாடியில் தன்னைப் பார்த்தவள் ''அய்யோ...'' என்று அலறினாள்.

## 16



பை நிறைய பழங்களுடன் ஆஸ்பத்திரி வாசலில் காரை விட்டு இறங்கிய சந்துருவுக்கு மிகப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

'இன்னும் இரண்டு நாளில் சம்யுக்தாவை வீட்டுக்கு அழைத்துச் செல்லலாம்' என்று மருத்துவர் சொன்னதிலிருந்து உற்சாகமாகி விட்ட சந்துரு, அறை வாசலில் நிறைய பேர் குழுமியிருக்க... திடுமென அதிர்ந்தான்.



'என்னாச்சு? என் சம்யுக்தாவுக்கு ஏதாவது...'

''மிஸ்டர் சந்துரு... வந்து...''

''என்ன... சொல்லுங்க டாக்டர்?'' பதறினான்.

''உங்க... உங்க மனைவியைக் காணோம்!''

''எ... என்னது?''

''அறையில் இந்தக் கடிதம் மட்டும் இருந்தது!'' நீட்டினார், மருத்துவர்.

வாங்கி அவசரமாகப் படித்தான்.

*'என் இனிய கணவருக்கு!*

*உங்கள் மனைவியாய் வாழ எனக்கு எந்தத் தகுதியும் இனியில்லை. உங்களை விட்டுப் போகிறேன்.*

*அதிருஷ்டமில்லாத சம்யுக்தா.'*

படித்தவன், திடுக்கிட்டான்.

''எ... என்ன டாக்டர்... ஏன் இப்படி எழுதி இருக்கா? அவ இந்த ஆஸ்பத்திரியை விட்டுப் போகிற வரைக்கும் இங்கே என்ன பண்ணிட்டிருந்தீங்க? நான் உங்களையெல்லாம் சும்மா விடமாட்டேன். கோர்ட்டுக்கு இழுக்கிறேன். ச்சே...'' கையிலிருந்த பையைத் தூக்கி எறிந்தான்.

பழங்கள் நாலா பக்கமும் சிதறி ஓடின.

காரில் ஏறி அமர்ந்தவன், வெறி பிடித்தவனைப் போல் வேகமாய் இயக்கினான். காரில் பறந்துகொண்டே, தன் வீட்டுக்கும், அவளது அம்மா வீட்டுக்கும் போன் பண்ணி விசாரித்தான்.

அவள் இல்லை.

தகவலை அப்போதுதான் அறிந்து இரண்டு வீட்டிலும் கண்ணீர் ஆறு ஓடியது.

சந்துரு, டி.வி. நிலையம் - தோழிகள் வீடு என்று நாள் முழுக்கத் தேடி அலைந்தான். கிடைக்கவேயில்லை.

'ஏன் சமி... எனக்கேன் இந்தத் தண்டனை? உனக்கு என்ன குறை வைத்தேன்? ஏன் காணாமல் போனாய்? நீயில்லாமல் என்னால் இருக்க முடியுமா? ஏன்டி அதைப் புரிஞ்சுக்கலே? வந்துடு சமி... என்னைப் பைத்தியக்கார னாக்காதே! வந்துடும்மா...

எங்கே இருந்தாலும் ஓடி வந்துவிடு. என்னை உன் நெஞ்சில் கொஞ்ச நேரம் சாய்த்துக்கொள். எனக்கு அழ வேண்டும் போலிருக்கு. எங்கே இருக்கே சமி?

காலையில்கூட நீ சரியாக சாப்பிடலையே. அப்பக்கூட என்னிடம் நல்லாதானே சிரிச்சுப் பேசிக்கிட்டிருந்தே? அதற்குள் இப்படியொரு முடிவை எடுக்க உன்னைத் தூண்டியது எது?'

துவண்டுப் போய் வீடு திரும்பியவனை சம்யுக்தாவின் குடும்பத்தினரும் கண்ணீருடன் பார்த்தனர்.

''மாப்பிள்ளே... என் பொண்ணு கிடைச்சிட்டாளா?''

''இல்லே மாமா!''

''எங்கே போயிட்டா?''

''தெரியலே அத்தே!''

''என்ப்பா... உங்க ரெண்டு பேருக்கும் ஏதாவது சண் டையா?''

''என்னம்மா... உனக்குத் தெரியாதா? ஒரு நாளாவது என் சமி முகம் வாட பார்த்திருக்கியா?''



அப்பா குறுக்கிட்டார்.

''பின்னே எதுக்காக கடிதம் எழுதி வச்சிட்டுப் போயிட்டா?''

''அப்பா, ஆளாளுக்கு பதில் தெரியாத கேள்வி கேட்டு என்னைக் கஷ்டப்படுத்தாதீங்க... அவளைக் கண்டு பிடிக்கணும். அதுக்கு உருப்படியா ஏதாவது வழி சொல் லுங்க!'' கத்தினான்.

ஆளாளுக்குப் பதற்றத்தில் ஏதேதோ சொல்ல... அவ னுக்கு எதுவும் பிடிபடவில்லை.

''போலீசில் புகார் கொடுக்கலாமா?''

''இல்லே லெட்சுமி. அவசரப்பட வேண்டாம்'' என்றார், வரதன்.

''என் பொண்ணு இந்த மாதிரி முட்டாள்தனமா எதை யும் செய்ய மாட்டா. இப்ப, இப்படி பண்ணியிருக்காள்ன்னா... விபத்தில் கரு கலைஞ்சுப்போச்சே... அதனால மன சொடிஞ்சி தப்பான முடிவுக்குப் போயிருப்பாளோ?'' என்றாள், அழுகையுடன் மோகனா.

''இல்லே அத்தே... என் சம்யுக்தா உயிரோடு தான் இருக்கா. என் மனசு சொல்லுது. அவளுக்கு ஒண்ணும் ஆகாது!'' என்றான், அவ்வளவு வேதனையிலும் உறுதியாக!

ஆறு மாதம்! இறக்கை கட்டிப் பறந்தே போயிற்று. தேடித் தேடி அலுத்து, களைத்துப் போயினர்.

சம்யுக்தா பற்றி எந்தத் தகவலும் இல்லை. அறுவை செய்த முகம் முற்றிலும் வேறானது. பழைய சம்யுக்தா வுக்கும், இந்தப் புதிய முகத்திற்கும் சம்பந்தமே இல்லை. அதுவும் கன்னத்து தசைகளை இழுத்து வைத்து தைத்த தால் முக அமைப்பே சற்று கோரமாக இருந்தது.

புதிய முகத்தின் புகைப்படம் இல்லை! அதனால் தேடுவதில் சிரமம்.

சந்துரு ஒடுங்கிப் போனான். சம்யுக்தாவின் உடைகளை அணைத்தபடி அவன் கண்ணீர் விடுவது வாடிக்கையாயிற்று. அலுவலகத்தை மறந்து போனான்.

விஷ்ணு அவனைத் தேடி வந்தான்.

"என்னடா சந்துரு... இப்படி ஆகிட்டே?"

"ப்ச்!"

"உனக்கு ஆறுதல் சொல்ல நான் வரலை. ஏன்னா, சாதாரண வார்த்தைகளால் எந்தக் காயத்திற்கும் எளிதில் மருந்து போட்டுட முடியாது. நான் இப்ப வந்ததே வேறு விஷயமாகத்தான்!"

"என்ன விஷயம்?"

"ரெண்டு நாளைக்கு முன்னே நான் ஆந்திரா போயிட்டு, நண்பர்களின் வற்புறுத்தலால் வழியில் ஒரு பிள்ளையார் கோவிலுக்குப் போனேன். பெரிய கோவில், அமைதியான இடம்!"

"இதெல்லாம் எனக்கு அவசியமா?" எரிந்து விழுந்தான்.

"முழுசாகக் கேளு. சந்துரு விபத்து நடந்த பிறகு நீ கேட்டுக்கிட்டதால், சம்யுக்தாவை நானும் வந்து பார்க்கலே. அந்தக் கோவிலில் ஒரு பெண்ணைப் பார்த்தேன். கோவிலை எல்லாம் கழுவிச் சுத்தப்படுத்தி, குருக்கள் தர்ற சாப்பாட்டை சாப்பிட்டு, அங்கேயே தங்கி இருக்காள்! அந்தப் பெண்ணோட முகமும் விபத்தால் பாதிக்கப்பட்டு, சீர் செய்யப்பட்ட மாதிரி தெரிஞ்சது.



உயரம், உடல் அமைப்பு, நிறம் எல்லாமே சம்யுக்தா மாதிரியே இருந்தது. என்னை அவ பார்க்கலே! அவளுக்குத் தெரியாமே விசாரித்தபோது அவளும் அங்கே வந்து ஆறு மாசம் ஆகுதுன்னாங்க. இன்னைக்குத்தான் சென்னை வந்து சேர்ந்தேன். இந்தத் தகவல் வந்ததும் உன்னைத் தேடி வந்துட்டேன்!" என்றான், மூச்சு விடாமல்.

"விஷ்ணு... நீ சொல்றது உண்மையா? அவ என் சம்யுக்தாதானா?"

"அவளாக இருக்க அறுபது சதம் வாய்ப்பிருக்கு."

"இப்பவே புறப்படலாம் வா!"

காணிப்பாக்கம் பிள்ளையார் கோவில்!

தமிழ்நாட்டு எல்லையில் அமைந்துள்ள பிரபல தலம். திருப்பதி போய் விட்டு வருகிறவர்கள், அப்படியே காணிப்பாக்கம் கோவிலையும் தரிசித்துவிட்டு வருவார்கள்.

அன்று கூட்டம் அதிகமில்லை.

"இங்கே என்ன வேண்டிக்கிட்டாலும் நடக்கும்னு சொல்வாங்க. சந்துரு. பிள்ளையாரை நல்லா வேண்டிக்க!" காரை விட்டு இறங்கியதும் சொன்னான், விஷ்ணு.

ஒரு கணம் அங்கேயே நின்று, கண்களை மூடினான், சந்துரு.

"பிள்ளையாரப்பா... விழுந்து விழுந்து சாமி கும்பிடுறவன் இல்லே, நான்! ஆனா, மனசை சுத்தமா வச்சிருக்கிறவன். என் மனைவியை உயிருக்குயிரா நேசிச்சேன். அதை நீ நம்பறதா இருந்தா... என் சமியை திரும்ப என்கிட்டே கொடுத்துடு. வேறெதுவும் எனக்கு வேணாம்!"

"வா விஷ்ணு!"

நடந்தார்கள்.

"கோவில் நிர்வாகத்தில் விசாரிக்கலாமா?"

"அவசரப்படாதே, சந்துரு. ஆந்திரா எல்லையும், தமிழ்நாட்டு எல்லையும் கலக்கிற இடமிது. யார், என் னன்னு புரியாம நம்ம மேலே கையை வச்சிடுவாங்க. முதல்ல கோவிலை சுத்திப் பார்ப்போம். அப்புறம், அது அவதானான்னு உறுதி செய். இப்ப வா!"

அர்ச்சனை டிக்கெட் வாங்கிக் கொண்டு உள்ளே சென் றனர்.

ஆங்காங்கே இருந்த சிவன், பார்வதி, முருகன், நவகிரக சந்நதிகளை உன்னிப்பாகக் கவனித்தனர்.

கட்டுச்சோறுடன் மக்கள் அமர்ந்து சாப்பிடும் மண்டபத் தருகே இலைகளும், காகிதங்களும் இறைந்து கிடந்தன.

அதை ஒரு பெண் பெருக்கி, மூங்கில் கூடையில் போட்டுக் கொண்டிருந்தாள்.

விஷ்ணு பார்த்து விட்டான்.

வேறு பக்கம் பார்வையை ஓட்டிக் கொண்டிருந்த சந்துருவின் தோளில் கை வைத்தான்.

"சந்துரு... அதோ... நான் சொன்ன பெண், அவள் தான்!"

ஆவலாய்ப் பார்த்தான்.

மஞ்சள் நிற பருத்தி சேலை. சின்னதாய் கொண்டை, குனிந்திருந்ததால் முகம் தெரியவில்லை. ஆனால், அந்த உடல் அமைப்பும், நிறமும்...

சந்துரு அவளை நோக்கி விரைந்தான்.



குப்பைகளை அள்ளிப் போட்டுவிட்டு நிமிர்ந்த அப்பெண், இவனைப் பார்த்து விட்டாள்.

ஆயிரம் பட்டாம்பூச்சிகள் சந்துருவை சுற்றிப் பறந்தன.

"சமிதான்... இவ என் சம்யுக்தாதான்!'

"சமி..."

அவ்வளவுதான்... குப்பைக் கூடையை அப்படியே போட்டு விட்டு, அவள் ஒரே ஓட்டமாய் ஓடிப் போனாள். குப்பைகள் காற்றில் சிதறிப் பறந்தன.

சந்துருவும் ஓடினான்.

"சமி... நில்லு... சமி..."

ஒரு பெண்ணை யாரோ ஒருவன் விரட்டுகிறான்.

இதுதான் அங்கிருந்தவர்களின் மனதில் பதிந்தது. கிட்டத்தட்ட பதினைந்து பேர் சந்துருவை விரட்டி... அவன் மீது கை வைத்தனர்.

அடிபட்டக் காயங்களோடு ஓரமாய், சந்துரு. பக்கத் தில் விஷ்ணு.

அங்கே அமர்ந்திருந்த கோவில் குருக்கள், "ஏதாவது பேசும்மா!" என்று அவளிடம் சொல்லிவிட்டு வெளியேறி னார்.

மருத்துவமனையிலிருந்து தப்பிய சம்யுக்தா, ரெயில் முன் விழுந்து தற்கொலை செய்ய முயல... இந்த ரெங் காச்சாரி குருக்கள் காப்பாற்றி, தன்னுடன் அழைத்து வந்து, கோவிலில் துப்புரவாளர் வேலை வாங்கிக் கொடுத்தது எல்லாம் ஆறு மாதத்துக்கு முந்தைய கதை!

"சொல்லு சமி... என்னை ஏன் தவிக்க வச்சே? எதுக் காக என்னை விட்டு ஓடி வந்து இப்படி...?" என்றான் ஆதங்கமாய், சந்துரு.

"உங்களுக்கு மனைவியாய் வாழ எனக்கென்ன தகுதி இருக்கு?"

"இத்தனை காலம் வாழலையா? புதுசா என்ன தகுதி வேண்டிக்கிடக்கு?"

"என் அழகுக்காகவே ஆசைப்பட்டு கட்டிக்கிட்டவர், நீங்க. ஒரு நாள் உடற்பயிற்சி செய்யலேன்னாலும் விட மாட்டீங்க. அதையெல்லாம் விட, குழந்தை பெற்றால் உடற்கட்டு குலைந்துவிடும் என்று தத்து எடுக்க ஆலோசனை சொன்னவர்.

அப்படிப்பட்ட உங்களால், என்னாலேயே சகிச்சுக்க முடியாத முகத்தை எப்படி? அதான்..." கேவிக் கேவி அழுதாள்.

ஸ்தம்பித்துப் போயிருந்தான், சந்துரு.

"இவ்வளவுதானா சமி, நீ... என்னைப் புரிஞ்சுகிட்டது?"

"...."

"ரொம்ப வேதனையா இருக்குடா! நமக்கு அழகுதான் அறிமுகமே! அதன் பின் பரிமாறிக் கொண்டது இதயங் களையும், உணர்வுகளையும் தானே... அவை தானே நம் உறவைக் கட்டிப் போட்ட சங்கிலி?

என் இதயம் உன்னிடம் இருக்கும்போது என்னால் எப்படி உயிர் வாழ முடியும்? உன் அழகை ஆராதிப்பவன் தான் நான். அதனால் தான் முகப்பரு வந்தால் கூட, உன்னை டாக்டரிடம் அழைத்துச் சென்றேன். ஆனால், குழந்தை பெத்துக்க வேணாம், தத்தெடுக்கலாம்னு உன் னிடம் சொன்னது, உன் அழகு கெட்டுடக் கூடாதுங்கிற துக்காக இல்லேடா."

"......."



"ஒரு ஆண் நெஞ்சை நிமிர்த்தி கம்பீரமா நடப்பது எப்போது தெரியுமா? அவன் அப்பா ஆகிறபோது தான்! எனக்கு மட்டும் அந்த ஆசை இருக்காதா?"

"...."

"வீடு நிறைய குழந்தை பெத்துக்கணும்னு எனக்கு கொள்ளை ஆசை. ஆனா, என்னை பாதித்த ஒரு சம்பவத் தால் அந்த ஆசையை முளையிலேயே கிள்ளி விட் டேன்."

".........."

"எங்கம்மா என்னை பெத்தப்போ... ரொம்ப ஆபத்தான கட்டத்துக்குப் போயிட்டாங்களாம். பெரும்பாடுபட்டு தான் காப்பாத்தி இருக்காங்க. பிரசவம்ங்கிறது ஒவ்வொரு பெண்ணுக்கும் மறு பிறவி மாதிரி. உனக்கும் அது மாதிரி... அதை... என்னால் கற்பனை பண்ணிக்கூடப் பார்க்க முடியலே...

குழந்தை பெத்துக்கிறதில் நீ உறுதியா நின்னப்ப... என்னால் தடுக்க முடியலே. ஆனா, இவ்வளவு மோசமா என்னை எடை போட்டுட்டியே சமி!" என்றான், கண் ணீருடன்.

சம்யுக்தா திகைத்துப் போயிருந்தாள்.

அடுத்த கணம் ஓடி வந்து அவனைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

விஷ்ணு நாசுக்காய் வெளியே வந்தான்.

"மன்னிச்சிடுங்க... உங்களைத் தப்பா புரிஞ்சுக்கிட் டேன்... மன்னிச்சிடுங்க!"

"கொஞ்ச நேரம் பேசாமல் அப்படியே அமைதியா இரு!" என்ற சந்துரு, மனைவியை மென்மையாகக் கட்டிக் கொண்டான்.

இருவரின் கண்களிலும் கண்ணீர் வெளியேறிக் கொண்டிருந்தது.

இருக்கிற கொஞ்ச நஞ்ச கண்ணீரும் வெளியேறட்டும். தாம்பத்திய சங்கிலி, அவர்களை முன்னிலும் இறுகக் கட்டிப் போடட்டும்.

வெளியே கோவில் மணி ஒலித்தது.

'நீயும், நானும் வேறல்ல' என நினைக்கும் அவர்களுக்கு இனியெல்லாம் வசந்தமே!